Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


றெனி
பல், மூக்குக் கண்ணாடியகம்
- கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்ள
- உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
- மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்து கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
கண்டி வீதி, சாவகச்சேரி. 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பிரதான வீதி, பருத்தித்துறை.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஐப்பசி 10 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 11 (26.10.2004) செவ்வாய்க்கிழமை இதழ்: 26

## குழந்தையை இறுக அணைத்தவாறு தாயின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு!

### பொலிகண்டியில் நேற்று சம்பவம்

பொலிகண்டியில் 5 வயதுக் குழந்தையினதும் அவரது தயாரினதும் சடலங்கள் நேற்றுக்காலை கிணறொன்றில் இருந்து மீட்கப்பட்டன.

உதயபுரம், பலாலி வடக்கு, வசாவிளான் என்ற முகவரியைச் சொந்த இடமாகவும் தற்போது பதுவளை, பொலிகண்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மேரி அலமெல்டா (வயது 39), அந்தோனிப்பிள்ளை மேரி சுகிர்தா (வயது 5) ஆகியோரது சடலங்களே கிணற்றுக்குள் இருந்து மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது -


இவர்களின் எதிர்வீட்டுக்குப் பின்புறமாக 200 மீற்றர் தூரத்திலுள்ள கிணற்றில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் வீட்டின் சொந்தக்காரர் தண்ணீர் எடுக்கச் சென்றபோது குழந்தையின் வாயிலிருந்து நுரை கக்கியபடி குழந்தையை இறுகக் கட்டிப்பிடித்த வண்ணம் இருவரது சடலங்களும் தண்ணீரில் மிதப்பதைக் கண்டு அயலவருக்கு அறிவித்தார்.


இதைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை பொலிஸார், பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் ந.தங்கராசா, பொலிகண்டி கிழக்கு கிராமசேவகர், பொலிகண்டி மேற்கு கிராம சேவகர் ஆகியோரும் சம்பவம் இடம்பெற்ற இடத்தைப பார்வையிட்டு, 12.30 மணியளவில் சடலங்களை கிணற்றிலிருந்து மீட்டெடுத்து பிரேதபரிசோதனைக்காக வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி, அங்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி மயிலேறும்பெருமாள் பிரேதபரிசோதனையை மேற்கொண்டார். (12)

## விஞ்ஞானபீடத்தினரின் ஏற்பாட்டில் இன்றுமுதல் மாபெரும் கண்காட்சி!

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் 30 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விஞ்ஞானக்கண்காட்சி இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் காலை 9 மணிக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)





## இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில்

# இந்தியத் தலையீடு குறித்து ஆராய சனியன்று புதுடெல்கியில் மாநாடு!

(புதுடெல்கி)

**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களில் இந்தியாவின் தலையீடு எவ்வாறானதாக அமையவேண்டும் என்பது குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் சனிக்கிழமை புதுடெல்கியில் விசேட மாநாடொன்றை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.**

இந்தியாவின் தேசிய நலன்களைக் கருத்திற்கொண்டு, இலங்கையின் நீண்டகால ஜனநாயக தீர்வை, அடிப்படையாகக் வைதது இந்தியா இதில் எவ்வாறு தலையிடலாம் என்பது குறித்தே இந்த ஒருநாள் மாநாட்டில் ஆராயப்படவிருப்பதாக இந்த மாநாட்டின் ஏற்பாட்டாளர்களில் முக்கியமானவரான டொக்டர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

அத்துடன் சர்வதேச ரீதியில் இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்சினைகளின் நிலைப்பாட்டையும் எடுத்து விளக்குவதாக இந்த மாநாடு அமையுமெனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக சுப்பிரமணியம் சுவாமி மேலும் தெரிவித்துள்ளதாவது -

இலங்கைத் தமிழ்க் குழுவொன்றினால் அமெரிக்க பெல்மொன்ட் என்ற இடத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட மாநாட்டின் தொடர்ச்சியாகவே இது நடத்தப்படவுள்ளது.

அத்துடன் இந்த மாநாட்டிற்கு இலங்கையிலிருந்து புத்திஜீவிகள் மற்றும் சமூகப் பிரதிநிதிகளையும் அழைக்குமாறு அந்தக் குழு என்னைக் கேட்டுள்ளது.

இந்த மாநாட்டில் 35 பேர் கலந்துகொள்ளவுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியர்களாவர். இந்த மாநாடு வெற்றியடைவதற்காக ஜனாதிபதி அப்துல்கலாம் விசேட செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார். அத்துடன் இதேபோன்ற செய்தியை (12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் நவம்பர் 8 இல் பதவியேற்பார்!

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் வோன் விங்கின், தனது பதவியை அடுத்த மாதம் 8 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

தற்போது கிழக்குக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள அவர் - அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாவட்டங்களின் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சர்வதேசக் கண்காணிப்பாளர்கள், அரச மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புக் கண்காணிப்பாளர்கள், படையதிகாரிகள் ஆகியோரையும் இவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான விஜயத்தை மேற்கொண்ட இவர், மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகததில் கண்காணிப்பாளர்களுடனான சந்திப்பை முடித்துக்கொண்டு 233 ஆவது பிரிகேட் இராணுவத் தலைமையகத்தில் கட்டளை அதிகாரி கேணல் எல்.ஆர்.அமரதுங்கவைச் சந்தித்து கலந்துரையாடினார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்று கொக்கட்டிச்சோலையிலுள்ள மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் தயாமோகனையும் இவர் சந்தித்தார்.

இந்த விஜயம் அறிமுக விஜயமாக இருந்தாலும் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து இரண்டு விடயங்கள் அவரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதாகத் தெரியவருகிறது.

வாழைச்சேனை - ஆலங்குளம் அரசினர் பாடசாலைக்கு அருகில் புதிதாக இராணுவக் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுவருவது, மட்டக்களப்பு நகர் உட்பட இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் தமது ஆதரவாளர்கள் கடந்த வாரம் படுகொலை செய்யப்பட்டமை ஆகிய விடயங்களே அவரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதாகத் தெரி (12 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் நேற்றிரவு துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி!

(கொழும்பு)

கொழும்பு - வெள்ளவத்தை றொக்சி காடன் பகுதியில் கருணா குழுவினர் தங்கியிருந்த வீடொன்றின் மீது நேற்றிரவு இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மற்றொருவர் காயமடைந்தார்.

நேற்றிரவு 10.30 மணியளவில் இடம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் துப்பாக்கிச்சூடு 18 வயது இளைஞர் மரணம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி ஆறுமுகத்தான் குடியிருப்பில் நேற்றுமுன்தினம் இரவு 9.00 மணியளவில் 18 வயது இளைஞரொருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஏறாவூர் - ஆறுமுகத்தான் குடியிருப்பைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கிரனேட் வீச்சு சுவிற்சர்லாந்து நாட்டவர் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - பார் வீதியில் நேற்றிரவு இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட கிரனேட் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவர் எ.குன்றின் (வயது 61) எனத் தெரிவிக்கப்படுகிறது. சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த இவர் மட்டக்களப்பு பெண்ணொ (12 ஆம் பக்கம் பார்க்க)


எக்ஸ்போ ஏயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
தொடர்புகளுக்கு அலுவலகம் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரங்களின் நிர்ணய விலை நிதித்துறையால் அறிவிப்பு!

(கிளிநொச்சி)

விவசாயிகளின் நன்மை கருதி உரங்களின் ஆகக்கூடுதலான விலையை நிர்ணயம் செய்துள்ளதாக தமிழீழ நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டு பிரிவு அறிவித்துள்ளது.

இன்று முதல் (26.10.2004) அமுலுக்கு வரும் உரங்களின் நிர்ணய விலைக்குக் கூடுதலாக விற்பனை செய்யவேண்டாம் என, விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

| பசளையின் பெயர் | உற்பத்தி நிறுவனத்தின் பெயர் | வன்னி விற்பனை விலை | யாழ். விற்பனை விலை |
|---|---|---|---|
| யூரியா (50 கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 645.00 | 665.00 |
| | சீ.ஐ.சீ | 660.00 | 680.00 |
| | இலங்கை உரம் | 620.00 | 640.00 |
| | ஹேலிஸ் | 660.00 | 680.00 |
| | கொலம்பியா | 660.00 | 680.00 |
| | பவர் | 630.00 | 650.00 |
| அமோனியா (50 கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1 120.00 | 1 140.00 |
| | சீ.ஐ.சீ | 1 315.00 | 1 335.00 |
| | இலங்கை உரம் | 965.00 | 985.00 |
| | ஹேலிஸ் | 1 140.00 | 1 160.00 |
| | கொலம்பியா | 1 090.00 | 1 115.00 |
| | பவர் | 1 315.00 | 1 375.00 |
| ரீ.எஸ்.பி. (50 கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1 645.00 | 1 665.00 |
| | சீ.ஐ.சீ | 1 695.00 | 1 715.00 |
| | இலங்கை உரம் | 1 470.00 | 1 490.00 |
| | ஹேலிஸ் | 1 485.00 | 1 505.00 |
| | கொலம்பியா | 1 465.00 | 1 485.00 |
| | பவர் | 1 695.00 | 1 760.00 |
| எம்.ஓ.பி. (50 கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1 720.00 | 1 745.00 |
| | சீ.ஐ.சீ | 1 815.00 | 1 835.00 |
| | இலங்கை உரம் | 1 340.00 | 1 360.00 |
| | ஹேலிஸ் | 1 405.00 | 1 425.00 |
| | கொலம்பியா | 1 565.00 | 1 585.00 |
| | பவர் | 1 815.00 | 1 875.00 |
| வி 1 (50 கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1 225.00 | 1 245.00 |
| | சீ.ஐ.சீ | 1 410.00 | 1 430.00 |
| | இலங்கை உரம் | 1 185.00 | 1 205.00 |
| | ஹேலிஸ் | 1 315.00 | 1 335.00 |
| | கொலம்பியா | 1 195.00 | 1 220.00 |
| | பவர் | 1 360.00 | 1 380.00 |
| ரீ.டி.எம் (50 கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 925.00 | 945.00 |
| | சீ.ஐ.சீ | 1 080.00 | 1 100.00 |
| | இலங்கை உரம் | 870.00 | 890.00 |
| | ஹேலிஸ் | 920.00 | 940.00 |
| | கொலம்பியா | 980.00 | 1 000.00 |
| | பவர் | 1 125.00 | 1 145.00 |

# ஐ.நா. வெளிக்கள நிலையத்தின் கண்காட்சி நேற்று ஆரம்பமானது!

ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட ஐக்கிய நாடுகள் வெளிக்கள நிலையம் நடத்தும் கண்காட்சி, நேற்று யாழ் பொதுநூல்கத்தில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வு காலை 11.00 மணியளவில் ஐக்கிய நாடுகளின் யாழ். மாவட்ட வெளிக்கள பொறுப் பதிகாரி கே.முறாட் தலைமையில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக - யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்ம நாதன், யாழ் மாநகரசபை ஆணை யாளர் க.குணராஜா, யாழ் மாவட் டத்திற்கான ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதிகள் ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றி வைத்தனர். தொடர்ந்து ஐக்கிய நாடுகளின் தலைமை அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட ஆசிச் செய்தி வாசிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறப்புரைகளை- யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். மாநகரசபை ஆணையாளர் ஆகியோர் நிகழ்த்தினர். இந்த நிகழ் வைத் தொடர்ந்து சிறப்பு விருந்தி னர்கள் கண்காட்சியைப் பார்வை யிட்டதுடன் இந்த நிகழ்வை நினைவு கூரும் மரநடுகை நிகழ்வும் நடை பெற்றது.



## முன்னாள் எம்.பி. கிங்ஸ்லி இராசநாயகத்தின் நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் இனந்தெரியாத வர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின ரான கிங்ஸ்லி இராசநாயகத்துக்கு, நாளை நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பா ணத்தில் அமைந்துள்ள பட்டப்படிப்பு கள் நிறுவன மண்டபத்தில் - காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட வங்கி ஓய்வூதியர் சங்கத் தலைவர் ஆர்.சுந்தரலிங்கம் தலைமையில் இந்த நினைவஞ்சலிக் கூட்டம் இடம் பெறவுள்ளது.

இதில் வங்கி ஓய்வூதியர் சங்க பிரதிநிதிகள், வங்கிகளின் நிர் வாகப் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் நினைவுரை ஆற்றுவர்.

## வாணி விழாவும் இயங்கியல் கண்காட்சியும்

வல்வை சிவகுரு வித்தியாலயத் தில் வாணி விழாவும், இயங்கியல் கண்காட்சியும் கடந்த வெள்ளிக் கிழமை வித்தியாலய அதிபர் த. தவேந்திரராசா தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் - பிரதம விருந் தினராக வல்வெட்டித்துறை நகர சபை செயலாளர் செ.திருஞானசுந்த ரமும், சிறப்பு விருந்தினராக வல்வெட் டித்துறை சுகாதார பரிசோதகர் சி.சி. திருநவனும் கலந்துகொண்டனர்.

## புத்தக கண்காட்சியும் விற்பனையும்

நூலக வாரத்தை முன்னிட்டு பிறைட் புத்தக நிலையம் - பாடசா லைகளில் நடத்திவரும் புத்தக கண்காட்சியும், விற்பனையும் தொடர் நிகழ்வில் - இன்று கரவெட்டி ஞானப பிரகாசர் கல்லூரியிலும், வல்வை மகளிர் மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

நாளை இடைக்காடு மகாவித்தி யாலயம், கொற்றாவத்தை அமெ ரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாட சாலை ஆகியவற்றிலும்,

நாளை மறுதினம் தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்திலும், பருத்தித்துறை சென். தோமஸ் கத் தோலிக்க பெண்கள் பாடசாலை யிலும் நடைபெறவுள்ளது.

## வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் அனுமதியின்றி தற்காலிக கடை களை அமைத்து வியாபார நடவடிக் கையில் ஈடுபடும் வியாபாரிகள், மற்றும் கடை உரிமையாளர்கள் ஆகி யோருக்கான கலந்துரையாடல் இன்று மு.ப. 10 மணிக்கு நகரசபை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து வர்த்தகர்களையும் தவ றாது கலந்துகொள்ளுமாறு நகர சபை செயலாளர் திருமதி கு.ஆறு முகம் தெரிவித்தார். (29)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

யாழ்.பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் வா. செந்தில்நந்தன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு பிரதேச திணைக்களத் தலைவர்கள் அல்லது பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.


நிறஞ்சனாஸ் சங்கானை
சூர்யா, மாதவன், சித்தார்த், திரிஷா, மீரா ஜஸ்மின் மற்றும் பலர் நடிப்பில்
ஆய்த எழுத்து (ரீலஸ்)
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே)
TYCUS
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
(சீ-2723)

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான

ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் நடித்த
(ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
7 ஆவது ஜனத்திரள் வாரம்
இப்பொழுது இந்தியாவிலும் இலங்கை யிலும் ஒரே தின வெளியீடான
ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த
7/G றெயின்போ காலனி
இது ஒரு உண்மைக் கதை
பு.நே 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்
(சீ-2725)

## யாழ்.மாவட்டத்தில்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
தமிழ் மாணவர் ஒன்றியம் - யாழ். மாவட்ட வலயக் கல்விப் பணிமனைகளின் இணைந்த ஆதரவுடனும்,

## கிளிநொச்சி மாவட்டத்தில்

தமிழ் மாணவர் ஒன்றியம் - கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை ஆகியவற்றின் இணைந்த ஆதரவுடன்

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

க.பொ.த. (சா/ த) - 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை (பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும்) யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் இலவசமாக நடாத்த உள்ளது.

மேலதிக விபரங்கள் வெகு விரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்

பாடசாலை பரீட்சார்த்திகளும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இக் கருத்தரங்கில் பங்குபற்றலாம்

## யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை

45 வருடகாலசேவையில் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் 212, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளர் இலங்கை வங்கியின் 18 plus இளம்பருவத்தினருக்கு அன்புடன்....

SICS கணினி சேவைகள் இல.125A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எங்களின் நோக்கம், உங்களின் தொழில் நுட்பமுன்னேற்றம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம் 302, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

UNIT

GIT Global Info IDM (PVT) LTD. IDM

Softview Computer College 43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna

S.T.P 37, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## உதவி வழங்கும் நிதி நிறுவனங்கள்

# பொருத்தமற்ற கொள்கைகளை கடைப்பிடிக்க வற்புறுத்துகின்றன!

## நிதியமைச்சின் செயலாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டுக்குப் பொருந்தாத கொள்கைகளைக் கடைப்பிடிக்குமாறு சர்வதேச கடன் மற்றும் நன்கொடைகளை வழங்கும் அமைப்புக்கள் இலங்கையை வற்புறுத்துவதாக நிதி அமைச்சின் செயலாளர் டி.பி. ஜயசுந்தர குற்றம் சாட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் நன்கொடைகளை வழங்கும் சர்வதேச அமைப்புக்களே இவ்வாறு இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு பொருந்தாத நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்துகின்றன.

நாம் உலக வங்கி மற்றும் கடன் வழங்கும் அமைப்புக்களுடன் இலங்கைக்குப் பொருத்தமான செயற்திட்டங்கள் தொடர்பாகப் பேச்சுக்களை நடத்துகின்றோம். ஆனால், அவர்கள் எமது கருத்துக்களுக்கு அப்பால் அதிகாரப் பாங்கில் நடந்து கொள்கிறார்கள்.

கடன்வழங்கும் சர்வதேச நிதியங்கள் மற்றும் அமைப்புக்களின் கொள்கைகளும் அதிகாரத்தன்மையுடையன. அதேபோன்று அவர்களது ஆலோசகர்களும் அதிகாரத் தன்மை வாய்ந்தவர்கள்.

நாங்கள் சர்வதேச நிதிகளில் கொஞ்சம் தங்கியுள்ளோம் என்பது உண்மைதான். ஆனால் அவைதான் தஞ்சம் என்றிருக்கவில்லை.

வெளிநாட்டு வருவாய்த் திணைக்களத்தினூடாகப் பெறப்படும் வெளிநாட்டு உதவிகள் யாவும் நாட்டின் உண்மையான தேவைகள் எவை என்பது பற்றி பேச்சுக்கள் நடத்துவதற்கு ஏற்றவையாக அமைய வேண்டும். அவர்கள் கூறுவது எதனையும் நாம் அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது.

கடந்த 15 வருடங்களில் சர்வதேச கடன் மற்றும் உதவிகளால் நாடு 5.5 வீத வளர்ச்சியை அடைந்துள்ளது. ஆனாலும், வறுமை நாட்டில் பாரிய பிரச்சினையாக உள்ளது. எனவே, சர்வதேச உதவிகள் நாட்டின் முக்கிய பிரச்சினைக்குத் தீர்வாக அமையவில்லை.

நாம் ஒருபோதும் சர்வதேச நாணய நிதியத்தினதோ, உலக வங்கியினதோ கொள்கைகளுடன் ஒத்துப்போகவில்லை.

நாம் அவர்களுடன் ஒத்துப் போனால், நாட்டில் செயற்படுத்தப் படும் செயற்திட்டங்கள் எங்களுடையவையற்றவையாகி விடும். நாம் ஒத்துப்போகும் சந்தர்ப்பத்தில் செயற்திட்டங்கள் யாவும் சர்வதேச நாணய நிதியத்தினுடையதாகவோ, உலக வங்கியினுடையதாகவோ மாறிவிடும்.

எரிபொருள் இறக்குமதிக்காக 350 அமெரிக்க டொலர்கள் மேலதிகமாகத் தேவைப்பட்டபோது, நாங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கேட்டுச் செல்லவில்லை.

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், சர்வதேச நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதில் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வங்கி நியமனங்கள் குறித்து ஜே.வி.பியினர் அதிருப்தி!

(கொழும்பு)

அரச வங்கிகளில் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் குறித்து ஜே.வி.பி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜே.வி.பி களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர இது குறித்து கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சுகளுக்கு அமைவாக நியமனங்கள் மேற்கொள்ளப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதென்றும், அவ்வாறு செயற்பட்டாலும், கட்டாயத் தேர்வுப் பரீட்சைக்கு உட்படுத்தப் படவேண்டும் என்றும் வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்குப் பதிலளித்த பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய - அரச வ்ங்கிகளின் நியமனம் குறித்து கவலைப்படவேண்டாம் என்றும், அந்த நியமனங்கள் சரியான முறையில் மேற்கொள்ளப் படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இரு சிங்கள இளைஞர்கள் கைத்துப்பாக்கியுடன் கைது!

நீர்கொழும்பு - வென்னப்புவ பிரதேசத்தில் இரண்டு சிங்கள இளைஞர்கள் கைத்துப்பாக்கியுடன் கடந்த சனிக்கிழமை மாலை கைதுசெய்யபட்டனர்.

வென்னப்புவ பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றின்பேரில் இந்த கைத்துப்பாக்கிகளையும் அதற்கான ரவைகளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

சிலாபம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இதேவேளை, வவுனியா - கொழும்பு பயணிகளிடம் தங்க ஆபரணங்கள் கொள்ளையடித்து வந்த கொள்ளைக் கோஷ்டியினரை அனுராதபுரம் தம்பத்தேகம பொலிஸார் கடந்த சனிக்கிழமை கைதுசெய்தனர்.

இவர்களில் இருவர் இளம் பெண்களாவர். கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகளின் ஒரு பகுதியும் இவர்களின் பாவனையிலிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மதவாச்சிக்கும் - மாகோவிற்குமிடையில் ரயில் கொள்ளையில் ஈடுபட்டுவந்த, இந்த நால்வரும் நேற்றுமுன்தினம் அனுராதபுரம் நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

# உரிய பொருளாதார கொள்கை இன்மையால் நாடு நிதி நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது!

## அரசு மீது ஐ.தே.க குற்றச்சாட்டு

அரசாங்கத்திடம் உரிய பொருளாதாரக்கொள்கை இல்லாததன் காரணமாக நாடு நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இந்த நிதிநெருக்கடியை மூடி மறைக்கும் பொருட்டு, உலகத்தின் முன்னே அரசாங்கம் பாசாங்கு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இதன் காரணமாகத் திறைசேரியிடம் உள்ள அந்நியச் செலவாணி 1,700 மில்லியன் அமெரிக்க டொலாகளாக குறைந்துள்ளது.

மேலும் நாடு எதிர்நோக்கும் நிதி நெருக்கடியை அரசாங்கம் மறைத்து வருவதாகவும், இந்த முறை வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் பல்வேறு நிவாரணங்களை வழங்கவிருப்பதாகக் கூறப்படுகின்றபோதிலும், வரவு - செலவுத திட்டம் சிக்கலுக்குரியதாக அமையும்.

இதேவேளை, அதிகரித்துச் செல்லும் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த கூட்டமைப்பு அரசாங்கத்திடம் பொருளாதார முகாமைத்திட்டம் எதுவும் இல்லை என்வும், பந்துல குணவர்த்தன சிலாபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் குறிபபிட்டார்.

# அடுத்த ஒரு வருட காலத்துக்குள் முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணையவேண்டும்

## பேரியல் அஷ்ரப் அறைகூவல்



(கொழும்பு)

எந்த அரசியல் கட்சியில் இருந்தாலும் முஸ்லிம்களின் உரிமைக்காக சகல முஸ்லிம் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என, தேசிய ஐக்கிய முன்னணி தலைவியும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு நிந்தவூர் அட்டப்பள்ளத்தில் சக்காத் வீடமைப்புத் திட்ட ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் - அஷ்ரப்பின் அடுத்த பிறந்த தினமன்று சகல முஸ்லிம் அரசியல் கட்சிகளும் ஒரே அணியின் கீழ் இணைந்து கொள்ளவேண்டும்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பல்வேறு பிரிவாகப் பிரிந்து பல கட்சிகள் இன்று தோன்றியுள்ளன. இது துரதிஷ்டவசமானது.

நாம் எந்தக் கட்சியில் அல்லது எந்த அரசிருந்தாலும் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தயங்காது முகம்கொடுக்கவேண்டும். முஸ்லிம்களின் பிரச்சினைகள் முதன்மைப் படுத்தி செயற்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் த்விசாளரான நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத் உரையாற்றுகையில் -

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தேசிய ஐக்கிய முன்னணியும் இணைவது என்பது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தின் காலில் விழுந்து விடுவது அல்ல.

முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக இந்த இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படுவது இன்றைய காலகட்டத்தின் கட்டாய தேவையாகும். இரு தலைமைகளும் கடந்த கால கசப்புணர்வுகளை மறந்து பரஸ்பர அடிப்படையில் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தவிசாளர் எம்.ஐ.உதுமாலெப்பை, பிரதி தகவல்துறை அமைச்சர் சேகு இஸ்சதீன் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் ஆகியோரும் இந்த நிகழ்வில் உரையாற்றினர்.

# ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு பாகிஸ்தான் - கராச்சியிலிருந்து வந்த பயணி ஒருவரிடமிருந்து சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது.

குறிப்பிட்ட பாகிஸ்தானிய பயணியின் நடத்தையில் சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள் - அவரின் பயணப்பொதியைச் சோதனை செய்தபோது அதில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

கட்டுநாயக்க விமானநிலையத்தில் தற்சமயம் நாளொன்றுக்கு ஒரு ஹெரோயின் கடத்தல் சம்பவம் இடம்பெறுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவித்தன. (01)

## அமெரிக்க விசா மோசடி

# கொழும்பு தூதரக ஊழியர்களுக்கு 5 வருட கடூழிய சிறைத்தண்டனை

பல ஆயிரம் அமெரிக்க டொலர்களை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டு, அமெரிக்காவுக்குச் செல்வதற்கான விசாக்களை வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட அமெரிக்க தூதரக அதிகாரிகள் இருவருக்கும் 5 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய லோங் என். லீ என்ற 52 வயதுடைய பெண்ணும், அவரது கணவரான 34 வயதான அசி ஆர்.ஜோன்சனும் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் அமெரிக்க லஞ்ச ஊழல் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் லஞ்சமாக பல ஆயிரம் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொண்டு இலங்கை, இந்தியா, பிஜி மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு 200 இற்கும் மேற்பட்ட அமெரிக்க விசாக்களை வழங்கியுள்ளனர்.

இவர்கள் இருவரும் 1995 ஆம் ஆண்டிலிருந்து இவ்வாறு லஞ்சம் பெற்றமையை ஒப்புக்கொண்டதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து இவர்களால் கொள்வனவு செய்யப்பட்ட 750 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியுடைய உடமைகள் விசாரணை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டன.

அத்துடன், இவர்களது அமெரிக்க வீட்டில் காணப்பட்ட 350 ஆயிரம் அமெரிக்க டொலர் பணத்தையும் கைப்பற்றிய விசாரணை அதிகாரிகள் - இவர்களது வங்கிக் கணக்கு மற்றும் பிள்ளைகளது வங்கிக்கணக்குகளில் காணப்பட்ட பல லட்சம் அமெரிக்க டொலர்களையும் பறிமுதல் செய்தனர்.

விசாக்களை வழங்குவதற்கு இடைத்தரகராகச் செயற்பட்ட 57 வயதான இலங்கையரான ரமேஸ் கே.ஜெயசிங்க என்பவருக்கும் விசாரணை அதிகாரிகள் 21 மாத சிறைத் தண்டனை வழங்கியுள்ளனர்.

# சமாதான முயற்சிகளுக்கு அனைவரதும் ஒத்துழைப்பு தேவை

## பிரதமர் ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு சகல அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியமாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாத்தறை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவிக்கையில் -

நாட்டின் முக்கியமான பிரச்சினை ஒன்றை தனி ஒரு கட்சியால் தீர்க்கமுடியாது. நாம் அனைவரும் பொறுப்பாக செயற்படவேண்டிய காலம் ஒன்று வந்துள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கும், சமூக அபிவிருத்திக்கும் அரசியல் பேதம் கிடையாது. இது எமது நாடு, நாம் பிறந்த மண். இதனைப் மதிக்க வேண்டியது எமது கடமையாகும்.

வடக்கு - கிழக்கில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவதோ, தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் இலங்கைத் தீவில் ஒரு தனி நபருக்குக் கூட பயம் இல்லாது வாழ வைப்பதும் தனிநபர் ஒருவருக்குச் சொந்தமான விடயம் அல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்ரேலியாவை நாக்பூரில் எதிர்கொள்வதற்குத் தயார்

## சச்சின் டெண்டுல்கர் தெரிவிப்பு



(நாக்பூர்)

அவுஸ்ரேலியாவை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

காயம் காரணமாக கடந்த 3 மாதகாலமாக விளையாடாமல் இருந்துவந்த சச்சின், உடற்தகுதிபெற்று 3 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ளார்.

நாக்பூரில் ஞாயிற்றுக்கிழமை பயிற்சி மேற்கொண்ட பின்பு செய்தியாளர்களின் கேள்விக்கு அவர் அளித்த பதில்கள் :

*கேள்வி : அவுஸ்ரேலியாவுடன் என்ன மாதிரியான உத்தியைக் கையாளப்போகிறீர்கள் ?*

பதில் : அவர்களுடன் பலமுறை விளையாடியிருக்கிறேன். அவர்கள் எப்படி ஆடுவார்கள் என்பது எனக்குத் தெரியும். எதிர்பாராத விதமாக ஆட்டப் பயிற்சியில் நான் ஈடுபட முடியாமற் போய்விட்டது. ஆனால், கடந்த 3, 4 நாட்களாகத் தேவையான வலைப்பயிற்சியை மேற்கொண்டுள்ளேன்.

*கேள்வி : ஆட்டமுடிவு எப்படியிருக்கும் ?*

பதில் : நாக்பூர் மைதானத்தில் அவுஸ்ரேலியாவை எதிர்கொள்வதற்கேற்ப என்னைத் தயார் செய்து கொண்டுள்ளேன். ஒவ்வொரு நாள் முடிவிலும் சிறப்பாக ஆடினோம் எனும் திருப்தியுடன் களத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்பதற்கேற்ப உள்ளேன். இதற்கு முன் நிகழாத எதையும் குறித்துக் கருத்துக் கூற மாட்டேன்.

*கேள்வி : பெங்களூர், சென்னை டெஸ்ட்களில் விளையாடாதது குறித்து.....*

பதில்: மிகவும் வெறுப்படைந்தேன். ஆடை மாற்றும் அறையில் தனியாக இருப்பதை அறிந்து மிகவும் வருத்தப்பட்டேன். விளையாடாமல் அறையில் இருப்பது மிகவும் கடினம் என்பதை உணர்ந்தேன்.

தற்போது விளையாடவுள்ளமை மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. முடிந்த அளவிலான ஆட்டத்தை வெளிப்படுத்தி, அணிக்குப் பெருமை சேர்ப்பேன்.

*கேள்வி : கையில் ஏற்பட்டிருந்த காயம் இனிமேல் பிரச்சினை அளிக்காதா ?*

பதில்: இந்தப் பிரச்சினையில் இருந்து 100 சதவீதம் முழுமையாக விடுபடமுடியாது என டாக்டர்கள் என்னிடம் கூறியுள்ளனர். ஆனால், இப்போது நன்றாக உள்ளேன். வலி ஏதும் இல்லை.

*கேள்வி : 3 ஆவது டெஸ்ட்டில் விளையாடுவதற்கு நீங்களாக முன்வந்தீர்களா ?*

பதில்: அவசரப்பட்டு நானாக விளையாட வந்ததாக உணரவில்லை. என்னுடைய 115 ஆவது போட்டியில் ஆடுவதாகவே உணர்கிறேன். அதற்கேற்றவாறு என்னைத் தயார்ப்படுத்திக் கொண்டுள்ளேன்.

*கேள்வி : தொடர்ந்து 5 முதல் 6 மணி நேரம் விளையாடமுடியுமா ?*

பதில் : அவ்வளவு நேரம் தொடர்ந்து வலைப்பயிற்சியை நான் மேற்கொள்ளவில்லை. அம்மாதிரி விளையாடினால் மிகவும் மகிழ்ச்சியடைவேன்.

*கேள்வி : 3 மாதத்துக்குப் பின்பு மீண்டும் ஆடவுள்ளதால் அதிக நிர்ப்பந்தம் இருப்பதாக உணர்கிறீர்களா ?*

பதில் : நிச்சயமாக. ஆனால், ஒவ்வொரு முறை களத்தில் இறங்கும்போதும் பயம் கலந்த பொறுப்புணர்வுடன் செல்வேன். அந்த மாதிரியான உணர்வு எப்போதும் என்னிடம் இருக்கும்.



*கேள்வி : காயம் காரணமாக எடை குறைந்த துடுப்பை பயன்படுத்தப் போகிறீர்களா ?*

அப்படியெல்லாம் கிடையாது. வழக்கமாக நான் பயன்படுத்தும் துடுப்புக்கு நிகரான துடுப்பையே பயன்படுத்தவுள்ளேன் என்றார் சச்சின்.




# டெண்டுல்கர், லாரா ஆகியோருக்கு பந்து வீசுவது கடினமான வேலை!

## மக்ரா கூறுகிறார்



சர்வதேச அளவில் டெண்டுல்கர் மற்றும் லாரா ஆகியோருக்கு பந்துவீசுவது கடினம் என்று அவுஸ்ரேலிய வேகப் பந்து வீச்சாளர் மக்ரா தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளரான கிளென் மக்ரா தனது 100 ஆவது டெஸ்ட் போட்டியில் நாக்பூரில் இன்று ஆடக் காத்திருக்கிறார்.

இவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கும்போது - சர்வதேச அளவில் டெண்டுல்கர் மற்றும் லாரா ஆகியோர்களுக்கு பந்துவீசுவது கடினம் என்று கூறியதுடன் 100 ஆவது டெஸ்ட் குறித்து கூறுகையில்,

இது என்னைப் பொறுத்தவரை மகிழ்ச்சியான விடயம். அதேவேளை, இந்தப் போட்டியில் 10 விக்கெட்டுக்களைச் சாய்க்க முடிந்தால் என் வாழ்க்கையில் அதை மறக்க முடியாது.

டெண்டுல்கர் மற்றும் லாரா ஆகியோர்களுக்கு எதிராக நான் சிறப்பான முறையில் பந்துவீசி சாதித்துள்ளேன். ஆனால், பெரும்பாலான நேரங்களில் அவர்கள் ஆதிக்கம் செய்திருக்கிறார்கள். லக்ஸ்மன் மற்றும் டிராவிட் ஆகியோர் ஒருநாள் முழுவதும் துடுப்பாட்டம் செய்ததை என்னால் இன்னமும் மறக்க முடியவில்லை என்றும் மக்ரா தெரிவித்தார்.

# இளைஞர் சதுரங்கப் போட்டிக்காக கிறீஸ் செல்லும் மாணவி கௌரவிப்பு

தேசிய மட்ட இளைஞர் சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்று, தற்போது சர்வதேச இளைஞர் சதுரங்கப் போட்டியில் பங்கேற்பதற்காக, கிறீஸ் நாட்டுக்குச் செல்லவுள்ள வேம்படி உயர்தரப் பாடசாலை மாணவி சிவகுருநாதன் வித்தியாரணிக்கு - தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ் மாணவர் ஒன்றியத்தில் நேற்று மாலை 5.00 மணியளவில் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செழியன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பாராட்டுரைகளை யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி.பொன்னம்பலம், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் நிகழ்த்தினர். சிறப்புரையை யாழ். மாவட்ட அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன் நிகழ்த்தினார்.

மாணவியைப் பாராட்டும் வகையில் யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி பரிசில்களையும், யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பணப் பரிசையும் வழங்கிக் கௌரவித்தனர்.





## தேசிய மட்ட வலைப்பந்தாட்டம்

# இரண்டு பிரிவுகளிலும் வர்த்தக சங்க அணி வெற்றி

(வவுனியா)

அகில இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தால், தேசிய ரீதியாக நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் - ஆண், பெண் கலப்பு அணியிலும், பெண்கள் அணியிலும் அகில இலங்கை வர்த்தக சங்க வலைப்பந்தாட்ட அணி வெற்றிபெற்றது.

இந்த வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றபோது, வலைப்பந்தாட்ட சங்கத் தலைவி சுராணி ராஜபக்ஷ வவுனியா அரச அதிபர் கே.கணேஸ், நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தமிழ்மாறன், வவுனியா வடக்கு மகளிர் பொறுப்பாளர் ஆவர்த்தனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆண்கள் பெண்கள் கலப்பு வலைப்பந் தாட்டப் போட்டியில் - இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகிய அகில இலங்கை வர்த்தக சங்க வலைப்பந்தாட்ட அணி, அரச சேவையாளர் அணியை 18 - 11 என்ற புள்ளி அடிப்படையிலும்,

பெண்கள் வலைப்பந்தாட்டப் போட்டியில் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகிய அகில இலங்கை வர்த்தக சங்கப் பெண்கள் வலைப் பந்தாட்ட அணி கொழும்பு மாவட்ட அணியை 24 - 22 என்ற புள்ளி அடிப்படையிலும் வெற்றி கொண்டது.

இந்தப் போட்டியில் - சிறந்த தடுப்பாளராக குமார ஸ்ரீசில்வாவும், சிறந்த மைய விளையாட்டாளராக மஞ்சுகாவும், சிறந்த குறிபார்த்து எய்பவராக தம்பிகா அபயவர்த்தனவும், வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்களாக, மோசான, சந்துரு ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுப் பாராட்டப்பட்டனர்.

இதேவேளை, வலைப்பந்தாட்ட ராணி என்ற பட்டம் நிருகா தர்சினிக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (03)

# இன்று முதல் திருமலையில் கராத்தே பயிற்சிப் பட்டறை

(திருமலை)

வட - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் திருகோணமலை மக்கெய்சர் கலையரங்கில் இன்று முதல் மூன்று நாட்களுக்கு கராத்தே பயிற்சிப் பட்டறை ஒன்று நடாத்தப்படவுள்ளது.

எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டு விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், இந்தக் கராத்தே வீரர்கள் சகிதம் 32 பேர் இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றவுள்ளனர்.

இவர்களுக்கு சிறப்பாக கராத்தே நடுவர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வலிகாமம் வலயமட்ட உதைபந்தாட்டப் போட்டி

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் இன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று காலை 8-30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும், யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதவுள்ளன.


இதேவேளை, இன்று பிற்பகல் 2-30 மணிக்கு 16 வயதுப் பிரிவில் ஏழாலை சிறிமுருகன் மகாவித்தியாலய அணியை எதிர்த்து, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும்-

ஆனைக்கோட்டை [illegible] பாடசாலையை எதிர்த்து தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் விளையாடவுள்ளன. (72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவணன் சிங்கள மன்னனா? தமிழ் மன்னனா?

## மேவின் சில்வாவுக்கு ஈழவேந்தன் பதில்



பொய் சொல்லும் உரிமை எவருக்கும் உண்டு. ஆனால், பொருந்தப் பொய சொல்லவேண்டும். இல்லாவிடின், உலகின் ஏளனச் சிரிப்புக்கு ஆளாக நேரிடும். சிங்களவர்கள் ஆளும் இனம் என்னும் ஒரே காரணத்தால், வரலாற்றை தாம் விரும்பியபடி திரிககலாம் என்று கருதுகிறார்கள்.

என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்படுகிறது.

அந்த அறிக்கையில் மேலும் - 1947 ஆம் ஆண்டில் மக்கள் குடித்தொகை அறிக்கையின் முன்னுரையில் - இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராய் விளங்கிய சேர் ஆதர் ரணசிங்கவின் பொருந்தாப் பொய்யுரையில் விஜயனும், அவனுடைய எழுநூறு தோழர்களும் பாண்டியன் மதுரையிலிருந்து பெண் எடுக்கவில்லை என்று, மாறாசுரத்தில் உள்ள வட மதுரையில் இருந்துதான் பெண்களை வருவித்து திருமணம் செய்தனர் எனறும் பொருந்தாப் பொய் எழுதினார்.

உலக இயல்பின்படி பக்கத்து நாடுகளிலிருந்துதான் பெண் கொள்வது வழக்கம். சிங்களவர் புகழ்பாடும் கிறிஸ்துவின் 6 ஆம் நூற்றாண்டில் எழுந்த மகாவம்சம்கூட, விஜயனும் தோழர்களும் பாண்டி நாட்டு மதுரையிலிருந்துதான் பெண் எடுத்தனர் என்று கூறுகையில், சிங்களவரின் தாய் வழி முன்னோர் தமிழராய் இருப்பது தமக்கு அவமானம் என்று கருதுகிற நிலையில், சிங்கள வெறிக்கு ஆளாகி, ஒரு படித்த மேதாவியாகிய சேர். ஆதர் ரணசிங்க கூட, இத்தகைய உலகம் எள்ளி நகையாடத்தக்க முறையில், பொருந்தாப் பொய் உரை கூறியுள்ளார்.

இவரைப் போன்றே தம் வசதிக்காக வரலாற்றை மாற்றி அமைக்கிற சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் காளான்போல் முளைக்கத் தொடங்கியுள்ளனர்.

1980 ஆம் ஆண்டுகளில் இன்றைய இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகராக விளங்கும் லொக்கு பண்டாரகூட, அன்று நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் - சிங்களவராகிய நாம் தான் உண்மையில் இராவணன் பரம்பரை என்றும், தமிழர்கள் இராமன் பரம்பரை என்றும் இதுவரை எவரும் சொல்லாத ஒரு புது விளக்கத்தைக் கொடுத்தார்.

அவருடைய புது விளக்கத்துக்கு அவர் கூறிய காரணம் இராமநாதன், இராமசாமி, இராமப்பிள்ளை, இராமேஸ்வரம் போன்ற பெயர்கள் தமிழருக்கு இருப்பது தம் கூற்றை மெய்ப்பிப்பதாகக் கூறினார்.

வைணவம் போன்ற பிற மதத் தாக்குதலால், இராமன் பெயரோடு இணைந்த பல பெயர்களைக் தமிழர் சூட்டியுள்ளது உண்மை. ஆனால் அவற்றைக்கொண்டு தமிழன் இராமன் மரபில், பரம்பரையில் வந்துள்ளான் என்று அவா முடிவுக்கு வந்துள்ளது தான் எம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

அண்மையில் சபாநாயகர் லொக்கு பண்டாரவுடன் நான் உரையாடிய பொழுது இந்தச் செய்தியை குறிப்பிட்டு, உங்கள் முடிவு தவறு என்று கூறியபோது பதில் கூறாது புன்முறுவல் பூத்தார்.

இன்றைய சபாநாயகர் லொக்கு பண்டார வழியில் சிந்திக்கிற, இன்றைய பதில் தொழிலமைச்சர் - குருடுக்கு குருடு வழிகாட்ட, இராவணன் சிங்களப் பெருமன்னன் என்று நிலைநாட்ட முனைந்துள்ளார்.

அவர் மேலும் ஒருபடி சென்று, இராவணன் விமானம் வைத்திருந்தான் என்றும், உலகத்துக்கே விமானத்தை அறிமுகப்படுத்தியவர் இராவணன் என்றும் கூறுகிறார்.

இராவணன் வானூர்தியை வைத திருந்தாரா? இல்லையா என்பது வேறு கதை. ஆனால் உலகுக்கு விமானத்தை அறிமுகப்படுத்தியவர் இராவணன்தான் என்ற அவர் முடிவை உலகறிஞர்கள் ஏற்பார்களா? என்பது பெரும் கேள்விக்குறியேயாகும்.

**தமிழ் ஞானசம்பந்தர் வாழ்த்திய இராவணன்**

இராவணன் செந்தமிழ் தழுவிய செந்நெறியாம் சிவநெறியைத் தழுவி நின்றான் என்பதற்கு, ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் ஞானசம்பந்தர்தான் பாடியுள்ள திருநீற்றுப் பதிகத்தில் இராவணனைப் பற்றி பின்வரும் வரிகளைப் பாடியுள்ளார்.

'இராவணன் மேலது நீறு எண்ணத்தகுவது நீறு' என்று இராவணன் பெரிய சிவபக்தன் என்பதை உலகுக்கு பறைசாற்றினார். இராவணன் புகழை 6 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 7 ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்த நாவுக்கரசரும் தமது தேவாரப் பாடல்களில் பாடியுள்ளமைக்கு பல சான்றுகள் உண்டு.

**கம்பன் கண்ட இராவணன்**

இராமன் புகழ்பாட வந்த கவியரசர் கம்பன்கூட இராவணனின், இறைவனை ஈர்க்கின்ற வீணை மீட்கும் ஆற்றலையும், இராவணனுக்கு சங்கரன் சிவன் கொடுத்த வாளைப்பற்றியும் கூறியுள்ள செய்திகளை நாம் இங்கு நினைவு கொள்ளலாம். அத்தோடு 'இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்' என்று அறிஞர் அ. ச. ஞானசம்பந்தன் வரைந்துள்ள நூலையும் - இலக்கியத் திறனாய்வாளர் பயில்தல் பயன் பல அளிக்கும்.

இவையனைத்தையும் மிஞ்சுகின்ற அளவுக்கு புலவர் குழந்தை எழுதிய - இராவண காவியத்தை நுகர்வோர் இராவணனின் அளவுக்கரிய புகழை நுகர்ந்து, உவகை உறுதல் உறுதி. நூலின் உள்ளடக்கத்தை விரிக்க அஞ்சி விடுத்துள்ளோம்.

மேவின் சில்வா - இராவணன் தம் முன்னோர் என்றும், பெரும் சிங்கள மன்னன் என்றும் நாடாளுமன்றத்தில் 21-10-2004 இல் முழங்கினார். மறைந்த நடிகன் காமினி பொன்சேகாவுக்கு இரங்கல் உரை நிகழ்த்திய போதே, அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். மறைந்த ஒரு மனிதனுக்கு இரங்கலுரை நிகழ்த்தியபோது அந்த உரையை தடுத்து நிறுத்த நாம் விரும்பவில்லை.

ஆனால், அடுத்த நாள் 22-10-2004 அவருடன் கேள்வி கேட்டு தெளிவுபெற, சபாநாயகரிடம் இசைவு கேட்டபோது, இன்று அவர் நாடாளுமன்றம் வரவில்லை. அவர் வந்திருந்தால், இந்தக் கேள்வி எழுப்பமுடியும் என்று கூறினார்.

அமைச்சர் மேவின் சில்வா அவர்களுக்கு இந்தக் கட்டுரையின் சிங்கள ஆக்கம் கொடுக்கப்படும் பொழுது பொருளற்ற முறையில் பிதற்றுவதை அவர் தவிர்த்து, சிந்தனைத் தெளிவு பெறுவார் எனக் கருதப்படுகிறது.

## மெமோறியல் பாடசாலையின் ஆண்டு விழாவும், மலர் வெளியீடும்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் 168 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், மெமோறியல் மலர் வெளியீடும் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை 2.30 மணிக்கு கல்லூரி அழகரெத்தினம் மண்டபத்தில் அதிபர் அ.மு.அருணாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு - யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், தமிழீழக் கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்ரர், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

மெமோறியல் மலரை - சைவப் புலவர் சு.செல்லத்துரை வெளியீடு செய்து, வெளியீட்டுரையும் நிகழ்த்தவுள்ளார்.

(91)

## மண்டலாபிஷேகம்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு அருள்மிகு திருவங்கேணிப் பிள்ளையார் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தியும், சங்காபிஷேகமும் நாளை காலை இடம்பெறவுள்ளன.

கடந்த ஆவணி மாதம் இடம்பெற்ற மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து இடம்பெற்று வந்த 48 நாள் மண்டலாபிஷேகம் - நாளையுடன் நிறைவடையும். சிவஸ்ரீ சோ.மதுசூதனக் குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறும்.

(24)

## ஆலய குரு கௌரவிக்கப்பட்டார்

சாவகச்சேரி - சரசாலை இலந்தைத்திடல் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்பாள் ஆலயத்தில் இந்த வருட நவராத்திரி விழா வெகுவிமரிசையாக நடைபெற்று முடிந்துள்ளது.

இந்த நவராத்திரிதின நிகழ்வுகளையும், கிரியைகளையும் சிறப்புற நிறைவேற்றிய 'பிரதிஷ்டா வித்தகர்', 'கிரியா கான கலாமணி' சிவஸ்ரீ கி.சோமசுந்தரக் குருக்கள் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மானம்பூ உற்சவத்தின் இறுதியில், ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்பு நிகழ்வில் 'சிவத்தம்பி சொல்லழகர்' ச.லலீசன் குருக்களைக் கௌரவித்து உரை நிகழ்த்த, பரிபாலன சபையினரால் பொன்னாடை போர்த்தப்பட்டு; தங்கச் சங்கிலி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

(24)

## 72 பாடசாலைகளில் குடிநீர் வசதிகள்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களைச் சேர்ந்த 72 பாடசாலைகளுக்கு குடிநீர் வசதிகளை வழங்க யுனிசெப் முன்வந்துள்ளது.

யாழ். கல்வி வலயத்தில் 14 பாடசாலைகளும், வடமராட்சி வலயத்தில் 15 பாடசாலைகளும், தென்மராட்சியில் 15 பாடசாலைகளும், வலிகாமத்தில் 15 பாடசாலைகளுக்குமாக நிரந்தர குடிநீர் தாங்கிகள் அமைத்து வழங்கப்படவுள்ளன.

இதற்கு 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலுள்ள குடிநீர் மாதிரிகளை - ஆய்வுக்குட்படுத்தும் பணியில் இந்த நிறுவனம் தற்போது ஈடுபட்டுள்ளது.

(17)

## வடமராட்சி கிழக்கு பாடசாலைகளில் விடுதிகள் அமைக்க கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கிலுள்ள பாடசாலைகளில், விடுதிகளை அமைக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கிலுள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களில் 75 வீதமானோர் - வடமராட்சி கிழக்குக்கு வெளியேயிருந்து வருபவர்கள். இவர்கள் தங்குவதற்கு வீடுகள் இல்லாமையால், பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

உடுத்துறை, வெற்றிலைக்கேணி பாடசாலைகளில் - விடுதிகள் புனர் அமைக்கப்பட்டு வருகிறபோதிலும், மிகுதிப் பாடசாலைகளில் விடுதிகள் இல்லாமையால், ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆகவே பாடசாலைகளில் விடுதிகளை அமைக்குமாறு, கற்பிக்கும் ஆசிரியர்கள் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (17)

## வடமராட்சி முன்பள்ளிகளில் அறுபது வீதமான மாணவர்கள் போஷாக்கின்மையால் பாதிப்பு

வடமராட்சியில் உள்ள முன்பள்ளிச் சிறார்களில் 60 வீதமானோர் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக, வடமராட்சி வலயக் கல்வி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் ஏற்பட்ட சொத்தழிவு, தொழில் இன்மை காரணமாக இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வறுமையால் பாதிக்கப்பட்ட சிறார்களின் சத்துணவுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென, கல்விச் சமூகம் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (17)

## பனை விதைகள் நாட்டுவதற்கு நடவடிக்கை

வடமராட்சி கிழக்கு- குடத்தனைப் பகுதியில், 10 ஆயிரம் பனை விதைகளை நடுகை செய்வதற்கும், ஏனைய இடங்களில் 5 ஆயிரம் பனை விதைகளை நடுவதற்கும் பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் யாழ். குடாநாடு எங்கும் பனை மரங்கள் இராணுவத்தால் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இதை ஈடு செய்யும் நோக்கமாகவே பனை அபிவிருத்திச் சபை இந்தத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

(17)

## விவசாயக் கடன் வழங்கல்

மட்டுவில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூக நிலையத்தால், காலபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளில் - தெரிவு செய் யப்பட்ட 20 விவசாயிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் பயிர்ச்செய்கைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

குறைந்த வீத வட்டியுடன் இலகு தவணைக் கட்டண முறையில் அமைநத இந்தக் கடனுதவி - ஜனவரி மாதமளவில் மேலும் சில தோட்டச் செய்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக, சனசமூக நிலையத்தின் தலைவர் க.பேரின்பநாதன் தெரிவித்தார். (24)

## உயர்தர மாணவர் ஒன்றுகூடல்

மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றுகூடலும், மதிய போசன நிகழ்வும் நாளை உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவர் ஆர் - கிருஷ்ணகுமார் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி இரா-சிவச்சந்திரன், தமிழீழக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த ஆர்வலன், வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (91)

## வெள்ளவாய்க்கால் புனரமைப்பு

வலிகாமம் தென்மேற்கு - மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பண்டத்தரிப்பு, மாகியப்பிட்டி, நொங்கத்தனை, வெள்ளவாய்க்கால் புனரமைப்பு பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

பிரதேச சபை ஊழியர்கள், சுகாதார தொழிலாளர்களுடன் இந்தக் கிராம மக்களும் இணைந்து, நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதிருந்த நொங்கத்தனை வெள்ளவாய்க்காலை புனரமைக்கப்படவுள்ளதாக பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

(91)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ச.சஜேய்
விலாசம் : நாவாந்துறை.

இரண்டாவது அகவையில்



பெயர் : அ.அனித்தா
விலாசம் : புலோலி மேற்கு.

நான்காவது அகவையில்



பெயர் : ந.விஜான்சிகா
விலாசம் : கோப்பாய் தெற்கு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# தூய ஒட்சிசன்




பிறந்த குழந்தைகளுக்குத் தற்போதைய சூழல் வளிமண்டலம் சுவாசிப்பதற்கு ஏற்றதல்ல என்று கூறப்படுகிறது. சர்வதேச அளவில் குழந்தை வைத்திய நிபுணர்கள் ஒன்று சேர்ந்து, ஏறக்குறைய 1300 குழந்தைகளை எடுத்து, அவர்களை ஆராய்ந்து பார்த்தபோது பல குழந்தைகள் ஒட்சிசன் வாயுவின் தூய்மையின்மையால் சுவாசிப்பதற்கு கஸ்டப்பட்டிருக்கின்றனர் என்பது தெரியவந்தது. ஏறக்குறைய 10வீதமான குழந்தைகள் பிறந்தவுடன் இயற்கைக் காற்றை சுவாசிக்க, முடியாது செயற்கைச் சுவாச உபகரணங்களை நாடுகின்ற னர். இதற்குக் காரணம் இந்த வளிமண்டலத்தில் காணப்படுகின்ற ஒட் சிசன் சுத்தமற்றதாக இருப்பதாகும். ஏறக்குறைய 1300 பிறந்த குழந்தைகளை உடனடியாக எடுத்து ஆராய்ந்து பார்த்தபோது, அவற்றின் 100 வீதமான ஒட்சிசன் சுத்தமில்லை. சிலவேளைகளில் குழந்தைகள் வைரஸ் நோய் களுக்கு ஆளாகின்றனர். இதற்குரிய காரணம், சுவாசம் மூலம் பெரிய அளவில் ஒட்சிசன் கடத்தப்படுவதாகும். இது மிகப்பெரிய சவாலாக உலகம் முழுவதும் தற்போது பேசப்பட்டுவருகிறது. சில வேளைகளில் குழந்தை சாதாரண சூழல் வளிமண்டலத்துக்கு கட்டுப்படுவதால் அங்கே சுவாச சிக்கல் ஏற்படாது. ஆனாலும், இதற்கு செயற்கை சுவாசம் கொடுக்கப்படும்போது மூச்சுத் திணறல் ஏற்பட வாய்ப்பு உண்டென வைத்தியர்கள் கருதுகிறார்கள்.

# மொபைல் தொலைபேசி அதிர்ஷ்டம்





நாங்கள் அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கள் மற்றும் தேசிய லொத்தர்கள் ஆகியவற்றின் வெற்றி இலக்கங்களைப் பத்திரிகைகளிலோ அல்லது தொலைக்காட்சிகளிலோ பார்க்கிறோம். தற்போது, இத்தகைய வசதிகள் மேல்நாடுகளில் கையடக்கத் தொலைபேசிகளில் வந்துவிட்டன. ஏறக்குறைய 1.5 மில் லியன் ஸ்ரேலிங் பவுண் பெறுமதியுடைய பரிசுகள் ஐரோப்பா முழுவதிலும் காணப்படுகின்ற கையடக்கத்தொலைபேசிகளில் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இது ஒவ்வொரு முறையும் பார்க்கப்படும்போது, பார்ப்பவருடைய தொலைபேசியிலிருந்து கட்டணம் கழிக்கப்படும். இதற்கு அனுசரணையாக ஸ்கை டிஜிற்றல் தொலைக்காட்சிச்சேவை தொழிற்படுகிறது. இதேவேளை - ஒன்லைன் மூலம் டிக்கட்டுகளை வாங்கக்கூடியதாகவும் இருக்கிறது. ஏறக்குறைய 600 ஆயிரம் வாடிக்கையாளர்கள் லொத்தர்களை வாங்குவதன் மூலம், சராசரியாக 500 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்களை செலவழிக்கிறார்கள் என, தரவுகள் கூறுகின்றன. கடந்த ஆறுமாதங்களில் மட்டும் இந்த விற்பனை 4.7 வீதத்தால் அதிகரித்துள்ளது. இது ஓர் அரிய சந்தர்ப்பம் என ஐரோப்பிய மக்களின் மத்தியில் ஓர் கருத்தும் நிலவுகிறது. இதனை விளையாட்டுப்போல மக்கள் எடுக் கிறார்கள். தேசிய லொத்தர்சேவையை, மொபைல் தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்கின்ற வாடிக்கையாளர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்படுகின்றன. இதன் காரணமாக மொபைல் தொலைபேசி கம்பனிகள் அதிரடிச் சலுகையை அறி வித்துள்ளன. கடந்தவருடம் நல்ல அதிகரிப்பைக் காட்டிய மொபைல் தொலைபேசி, அதிஷ்டலாபச் சீட்டு விற்பனை இந்த வருடம் மேலும் கூடும் என எதிர்பார்க்கலாம்.

# தனித்துவமான திரைப்பட திரைப்படம்



நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய டிஜிற்றல் தரத் திரைப்படங்கள் தற்போது திரையை ஆக்கிரமித்திருக்கின்றன. இவ்வாறான சிடிகளில் படம் பார்க்கின்ற அல்லது சிடிக்களை விற்பனை செய்கின்றவர்களுக்கு, அவர்களுடைய வருமானம் குறையக்கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. சில படச்சுருள்களில் டொல்பி மற்றும் டிஜிற்றல் ஒலி நயம் காணப்படக்கூடிய வாய்ப்புக்கள் மிகவும் அரிதாகவே உள்ளன. ஆனால், சில படச்சுருள்களில் இவை காணப்பட்டாலும், தியேட்டர்களில் காணப்படக்கூடிய தொழில் நுட்பக் கோளாறுகளால் இவை ஒலிப்பதில்லை. திருட்டுத் தனமாகத் தியேட்டர்களில், திருட்டு வி.சிடிக்காகப் படம் எடுப்பவர்களுக்கு இது பெரும் குறைபாடாகத்தான் தென்படுகிறது. ஆனாலும், சில டிஜிற்றல் மற்றும் டொல்பி ஒலிநயங்கள் தியேட்டர்களில் மட்டுமே ஒலிக்கும். ஆனால், திருட்டு வீ.சிடிக்களில் ஒலிக்காது. 2.6 மில்லியனுக்கும் மேற்பட்ட டிஜிட்டல் வி.சிடி, ஓ.சிடிக்கள் ஒவ்வொரு மாதமும் உலகளாவிய ரீதியில் இன்ரநெட் மூலம் பிரதி செய்யப்படுவதாகத் தொழில்நுட்பவியலாளர் கூறுகிறார்கள். ஏறக்குறைய 8.3 மில்லியன் மக்கள் இப்படியான வி.சிடிக்களின் பாவனையாளர்களாகக் இருக்கிறார்கள். ஆனாலும், அங்கே தியேட்டர் ஒலி, ஒலி நயம் இல்லை என்பது ஓர் குறைபாடுதான்.


# புரதக் குறைபாடு




கேட்டல் குறைபாடுகள் பல வகைப்படும். அவற்றுள் ஒன்று - பிறவிக் கேட்டல் குறைபாடு. அடுத்தது, இடையில் வருகின்ற கேட்டல் குறைபாடு. அமெரிக்காவின் வைத்திய ஆராய்ச்சியாளர்கள் கேட்டல் குறைபாட்டுக்கு மூல காரணம் புரதச்சத்து குறைபாடு என அடித்துக் கூறுகிறார்கள். கார்வாட் வைத்திய பயிற்சிக் கல்லூரியில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி, காதுகளில் காணப்படுகின்ற அதிருகின்ற மென்சவ்வு மற்றும் சிறிய எழும்புகளுக்கும் புரதக்குறைபாடு ஏற்படுகிறது. இதன் காரணமாக அங்கே அதிர்வு குறைகிறது. தொடர்ச்சியாக நடைபெறவேண்டிய தெறிவினை இதனால் பாதிப்படைகிறது. இதன் காரணமாக, மூளை சத்தத்தை உணராது தற்போது இந்தக் குறைபாட்டுக்குக் காரணமான புரதம் ரீ.ஆர்.பி.ஏ.ஒன்று என அழைக்கப்படுகிறது. எலிகளில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்படி, இந்தப் புரதம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புரதத்தால் துரித கணத் தாக்கம் எற்படும் என மருத்துவ ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். கடந்த 10 வருடங்களாக புரதத்தைப் பெறுவதற்காகப் பல்வேறுபட்ட ஆய்வுகளில் மருத்துவவியலாளர் ஈடுபட்டிருந்தனர். ஆனால், தற்போது இந்தப் புரதக்கலவை - நாகம், சோடியம், கல்சியம் ஆகிய மூலங்களைக் கொண்டிருக்கிறது எனவும் கூறப்படுகிறது.

# நெருப்புப் பறவை

சீன நாட்டு விஞ்ஞானிகள், பறவையினுடைய எலும்புக்கூடு ஒன்றைக் கண்டு பிடித்துள்ளனர். இது 135 மில்லியன் வருடங்களுக்கு முன்னால் வாழ்ந்த ஒன்று எனக் கூறப்படுகிறது. இது நெருப்பைக் கக்கக்கூடிய ஒருவகையான பறவையாக இருக்கலாம் எனப் பறவைகளை ஆய்வு செய்பவர்கள் கூறுகிறார்கள். பீஜிங் நாட்டில் இருக்கின்ற சீன நாட்டு விஞ்ஞானக் கழகத்தில் இந்த வகையான ஆராய்ச்சிகள் நடந்துகொண்டு வருகின்றன. இந்தவகையான பறவைகள் சாதாரணமாக அமைதியாக இறக்கும் என்றும், சிலவேளைகளில் மட்டும் நெருப்பைக்கக்கும் எனவும் கூறப்படுகிறது. இந்த வகையான பறவைகள் எரிமலைகளை அண்டிய பிரதேசங்களில் மட்டுமே வாழ்ந்திருக்கின்றன. இவை நெருப்பைக் கக்குவதற்கான காரணம் - எரிமலை வெடிக்கும்போது ஏற்பட்ட வாயுவை சுவாசித்தமையே என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இந்த வகையான பறவைகளுக்குச் சிறகுகள் இல்லை. இதனுடைய தலை கால்களால் மறைக்கப்பட்டிருக்கும். இவை அதிக உயரத்துக்குப் பறக்கமுடியாது. ஆகவே இவை கூடுதலாக நடந்து திரியக்கூடியனவாகும். இதனுடைய உடற்சூடு ஒப்பீட்டளவில் அதிகமானதாக இருக்கும். அதிலும் தலைப்பகுதி மிக அதிக வெப்பம் கொண்டதாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.



# பெருகிவரும் பறவைக் காய்ச்சல்



தாய்லாந்து நாட்டிலே காணப்படுகின்ற புலிகளுக்கு பறவைக் காய்ச்சல் நோய் வந்துள்ளது. தாய்லாந்தின் தலைநகரில் இருக்கின்றும். தாய் மிருகக் காட்சிசாலையில் சுமார் 50 புலிகள்வரை இந்த நோய்த் தாக்கத்துக்குட்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதே வேளை - கொன்பூரி என்ற மாகாணத்தில் காணப்படுகின்ற 400 புலி இனங்களில் 80 உடனடியாக இந்த நோயால் இறந்துள்ளன. இதற்கான காரணங்களை அறிவதில் உலக சுகாதார ஸ்தாபனம் முழு மூச்சுடன் இறங் கியிருக்கிறது. உலகிலேயே அழகான புலி இனங்கள் தாய்லாந்திலேயே வாழ்வதாகக் கூறப்படுகிறது. அவை இப்படி அழிவதைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட வைத்தியர்களால், இந்த நோய்க்கான காரணிகளான வைரஸ் - (எச் - 5) என் - 1 எனக் கூறப்படுகின்றது. இப்படியான நோய்கள் 1997 ஆம் ஆண்டு கொங்கொங் நாட்டில் முதன் முதலாகக் கண்டறியப்பட்டது. அதன்பின் வியட்நாம் நாட்டுக்கு இது பரவியது. தாய்லாந்தில் மட்டும் இதன் காரணமாக 11 மக்கள் இறந்துள்ளனர். 100 மில்லியனுக்கும் மேற்பட்ட பறவைகள் - இந்த நோய் காரணமாக தென்கிழக்காசிய நாடுகளில் துன்பப்படுவதாகப் பறவைகள் பற்றிய ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரை விமர்சனம்

## போஸ்



தயா படம் எடுத்த இயக்குநர் செந்தில் குமாரின் படம் இது.

அரசியல்வாதி கலாபவன் மணி, தீவிரவாதிகளால் கடத்தப்பட, அவரை மீட்கிறார் கப்டன் ஸ்ரீகாந். அவரை கறுப்புப் பூனைப் படைவீரராகக் கலாபவன் மணிக்கு அரசு நியமிக்கிறது. கலாபவன்மணி கல்லூரி மாணவி சினேகாவை கற்பழிக்க முயன்றபோது, கலாபவன் மணியை ஸ்ரீகாந் சுட்டுவிடுகின்றார். இந்த விடயங் களை இராணுவ நீதிமன்றத்தில் கூறுவதற்கு ஸ்ரீகாந் மறுத்துவிடுகிறார். இதனால் அவர் இராணுவத்திலிருந்து விலக்கப்படுகிறார். பின்பு கலா பவன் மணி – ஸ்ரீகாந்தின் குடும்பத்தை அழிக்கத் திட்டமிடு கின்றார். அத்துடன், கலாபவன் மணிக்கு தமிழக முதல்வராகும் வாய்ப்பு கிடைக்கிறது. இது நடந்ததா என்பதுதான் மீதிக் கதை.




அரசியல் வாதிகளின் பல வீனங்கள், இயக்குநரால் கோடிட்டுக் காட்டப்படுகின்றன. இராணுவக் கப்டன் வேடம் ஸ்ரீகாந்துக்குப் பொருந்தவில்லை. ஆனாலும், சண்டைக்காட்சியில் வெளுத்து வாங்கியிருக்கிறார். கலாபவன்மணி தான் ஹீரோபோல அற்புதமாக நடித்திருக்கிறார். சினேகா நல்ல கலகலப்பான மாணவியாக வருகிறார். நாகேஷ் மாணிக்கவிநாயகம் தலை வாசல் விஜய், தேவன் என்று ஒரு நட்சத்திரக் கூட்டமே நடித்திருக்கிறது.

இசையமைப்பாளர் யுவன்சங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள் வெற்றிபெறும் என்பது உறுதி. என்ன என்ன என்ற பாடல் அனைவரையும் முணுமுணுக்க வைக்கிறது. விஜய் மில்ட்டனின் ஒளிப்பதிவும், பீற்றர் ஜெய்னஸ் உடைய சண்டைக்காட்சிகளும் படத்துக்கு வலுச் சேர்க்கின்றன. போஸ் பாஸ் இல்லை.


– தர்ஷி –

# கட்டுப்படுத்த முடியாத காசநோய்




கட்டுப்பாட்டில் இருந்த காச நோயின் தாக்கம் -ஐரோப்பிய நாடுகளில் பழையபடி அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதன் காரணமாக இங்கிலாந்தில் மட்டும் 25 வீதமான மக்கள் இந்த நோயால் திடீரெனப் பாதிப் படைந்துள்ளனர். ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக இந்த நோயால் பீடிக்கப்பட்ட ஒருவர் இறப்பை எதிர்நோக்குகிறார். 2002 ஆம் ஆண்டில், இங்கிலாந்தில் மட்டும் ஆறாயிரம் காசநோயாளர்கள் காணப்பட்டார்கள். தற்போது பெருமளவு அதிகரிப்புடன் நோயாளர்கள் காணப்படுகிறார்கள். காசநோய்க்கு முழுமுதற் காரணியாக அமைவது பக்றீரியா. இது மிக வேகமாக காசநோய்க் கிருமிகளைக் கடத்தக் கூடியது. தேசிய சுகாதார சேவை நிறுவனத்தின் நாற்பது விசேட வைத்தியர்களும், 100 விசேட மருத்துவத் தாதிகளும் இணைந்து உடனடி நிவாரணத்தைத் தரக்கூடிய முறையில் ஒர் எதிர்ப்பு மருந்தை கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதேவேளை உலகம் முழுவதும் உள்ள எல்லாக் காசநோயாளர்களும் ஒர் நல்ல எதிர்ப்பு மருந்தை வேண்டிநிற்கிறார்கள். இந்த நோயானது ஒரு நாட்டில் மட்டும் கட்டுப்படுத்தினால், போதுமானதல்ல. உலகம் முழுவதும் கட்டுப்படுத்த வேண்டிய ஒன்றாகும். ஏனெனில், இது இலகுவில் பரவக்கூடியது.

# கதிர் வீசும் செய்மதி



செவ்வாய்க்கிரகத்தை 90 நாட்கள் சுற்றி, அதன் மூலம் சில அற்புதமான தகவல்களை அமெரிக்க, நாசா விண்வெளி ஆய்வுகூடத்திலிருந்து ஏவப்பட்ட செய்மதி ஒன்று வெளியிட்டுள்ளது. இது பிளாஸ்மா என்று சொல்லக்கூடிய கதிர் வீச்சின் மூலம், தூரத்தில் நின்றவாறே செவ்வாய்கிரகத்தை துல்லியமாக ஆராய்ந்துள்ளது. இந்த ஒளியின் வேகம் ஏறக்குறைய செக்கனுக்கு 11.7 கிலோ மீற்றர்களாகும். 2.5 வருடங்கள் வரையில் விண்வெளி ஆராய்வாளர்களால், ஆய்வு செய்து எடுக்கப்பட்ட பலதரப்பட்ட முடிவுகளை இந்தத் தொழில்நுட்பம் உடைக்கக்கூடியதாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. இந்த விண்கலம் – சூரிய சக்தியால் இயங்கக்கூடியதாகவுள்ளது. இந்த ஒளியை செலுத்துவதற்கு அதியுயர் மின் அழுத்தம் தேவையாதலால் மிகப் பெரிய சூரியப் படலங்கள் காணப்படுகின்றன. நாசா விண்வெளி ஆய்வு நிறுவனம் இதற்காக 75 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரையில் செலவழித்திருக்கின்றது. இதற்காகப் பாவிக்கப்பட்ட தொழில் நுட்பம் – மக்கள் தொழில் நுட்பம் என அழைக்கப்படுகின்றது. தொடர்ச்சியாகக் கதிர்வீச்சில் ஈடுபடுவதனால், பெருமளவில் மின்சாரம் தேவைப்படுகின்றது.



அது அந்தக் கருவியின் குறைபாடாகும்.

# ஆபிரிக்காவை அழிக்கும் மலேரியா



மலேரியா நோயைக் கட்டுப்படுத்த முடியுமே தவிர – முற்றாக ஒழிக்கமுடியாது என்ற ஒரு கருத்து விஞ்ஞானிகள் இடையே தற்போது நிலவி வருகிறது. ஆனால், சில மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் ஒன்று கூடி 2010 ஆம் ஆண்டளவில் மிகச்சிறந்த பலன் மிக்க மலேரியா எதிர்ப்பு மருந்தைக் கண்டு பிடிக்க முடியும் எனக் கூறுகிறார்கள். அதன் பிரகாரம் மொசாம்பிக் நாட்டில் ஏறக்குறைய 2022 பிள்ளைகள் இந்தவகை மருந்தால் மலேரியா நோயில் இருந்து முற்று முழுதாகக் குணமாகி இருக்கிறார்கள். இந்த மருத்துவ ஆராய்ச்சிக்குழு கண்டுபிடித்த மருந்தின் பெயர் ஆர்.ரீ.எஸ் மற்றும் எஸ்.ஏ.எஸ் 02 ஏ ஆகும். இந்தக் கண்டுபிடிப்பு தற்போது பார்சிலோனா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவருகிறது. கூடுதலான மலேரியா நோயாளிகள் ஆபிரிக்காக் கண்டத்திலே வாழ்வதாகக் கூறப்படுகிறது. 90வீதமான மலேரியா எதிர்ப்புச் சக்தியில்லாமல் காணப்படுகிறார்கள். ஏறக்குறைய இரண்டு வயது தொடக்கம் நான்கு வயது வரையிலான சிறுவர்கள் இந்த நோயால் பாதிக்கப்படுகிறார்கள். அதிலும் நுளம்பு மூலம் பரவுகின்ற மலேரியாவே கூடுதலாகக் காணப்படுகிறது. மொசாம்பிக் நாட்டின் சுகாதார அமைச்சரின் கருத்துப்படி மலேரியா நோய் ஆபிரிக்கச் சிறுவர்களின் ஒர் கொலைகாரன் ஆகும்.

# ங்கைக்கு அடக்கமான தொலைபேசி

கையடக்கத் தொலைபேசிகள் நாளுக்குநாள் சிறுத்துக்கொண்டே செல்கின்றன.



தற்போது தீப்பெட்டியளவில்கூடத் தொலைபேசிகள் வந்திருக்கின்றன. எமது நாட்டில் அதிகம் பாவனையில்லாத - ஆனால் ஐரோப்பிய நாடுகளில் நல்ல பாவனையிலுள்ள எஸ்.பீ.வீ, சீ - 500 ஆகிய தொலைபேசிகள் அதி உன்னதமான வசதிகளுடன் சந்தையில் விற்பனைக்காக வந்துள்ளது. இதில் காணப்படுகின்ற கலர்த்திரை மிகவும் பெரியதாகவும் துல்லியமானதாகவும் உள்ளது. இந்தத் தொலைபேசியின் இயக்கம் முற்றுமுழுதாக மைக்ரோ சொ.்.ப்ட் முறையால் இயக்கப்படுகின்றது. இதில் காணப்படுகின்ற டிஜிற்றல் வானொலி எம்.பி.3 பாடல்கள் கேட்கக்கூடிய வசதியுள்ளது. கைக்கடக்கமான இந்தவகைத் தொலைபேசி 100 கி.நிறையுடையது. அத்துடன் 65 மெகாபைட்கள் மெமரியைக் கொண்டது. முற்றுமுழுதாகக் கணினிபோன்றே இது காணப்படுகிறது. இதில் காணப்படுகின்ற மின்கலம் தொடர்ச்சியாக 8 மணித்தியாலங்கள் பேசக்கூடியவாறு உருவாக்கப்பட்டுள்ளது. இதனுடைய நீள, அகல, உயரம் என்பன முறையே 108, Y46, X14 மில்லி மீற்றராகும்.

# சீனாவில் காளையை அடக்கும் போட்டி



ஸ்பெயின் நாட்டில் காளைகளை அடக்கும் போட்டி மிகவும் பிலபல்யமானது. இந்த ஆண்டுக்கான காளைச் சண்டைப் போட்டிகள் மட்றிட் உட்பட பல்வேறு நகரங்களில் தொடங்கியிருக்கிறது.

இந்தக் காளை அடக்கும் போட்டி இப்போது சீனாவுக்கும் பரவியிருக்கிறது.

தொழில் நகரமான ஷாங்காய் நகரில் காளை அடக்கும் போட்டி முதல் முறையாக நடைபெறுகிறது. சற்று வித்தியாசமாக இந்தப் போட்டியை நடத்தி வருகிறார்கள். குதிரை மீது சவாரி செய்தபடி தான் காளையை ஈட்டியால் குத்தி அடக்கவேண்டும்.

# புதிய கரன்சி நோட்டுக்கள்



ஐப்பானில் கரன்சி நோட்டுக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து புதிய கரன்சி நோட்டுக்களை ஐப்பான் அரசு வெளியிடுகிறது. கள்ள நோட்டுக்களும் இதனால் பெருமளவு ஒழிக்கப்படும். புதிதாக ஆயிரம், 5 ஆயிரம், 10 ஆயிரம் யென் கரன்சி நோட்டுக்களை அரசு அச்சிட்டு வருகிறது. நவம்பர் முதலாம் திகதி முதல் இது புழக்கத்துக்கு வருகிறது.

5 ஆயிரம் யென் கரன்சி நோட்டில் பிரபல நாவலாசிரியை இச்சியோஹிகுசியின் படம் போடப்பட்டுள்ளது. இந்த கரன்சி நோட்டுப்படம் [illegible] வந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு -பாண்டியன்குளம் பிரதேசத்தில் விவசாய நிறுவனத்தால்

கடந்த சனிக்கிழமை காலை 10 மணிக்கு பாண்டியன்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தில் வைத்து பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு, விவசாய போதனாசிரியர் இளங்கீரன் தலைமையில் இடம்பெற்றது.

பாண்டியன்குளம் அரசியற்துறைப் பொறுப்பாளர் வேங்கை மாறன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழத்தினார்.

தொடர்ந்து பாண்டியன்குளம் பிரதேசத்தை சேர்ந்த 80 விவசாயிகளுக்கு தூயவிதை நெல் மற்றும் உளளீடுகள் வழங்கப்பட்டன.

## உடனடியாகப் பெற்றுக்கொள்ளவும்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உலக உணவு ஸ்தாபனத்தால் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு, விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டு வருகிறன.

இதுவரை இந்த விவசாய உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்ளாத விவசாயிகள் -

இன்று பெற்றுக் கொள்ளுமாறும், தவறவிடுவோர் - இனிமேல் பெற்றுக்கொள்ளமுடியாது எனவும், கற்சிலைமடு கமக்கார அமைப்புத் தெரிவித்துள்ளது.

# இங்கிலாந்து மருத்துவக் குழுக்கள் திலீபன் மருத்துவமனைகளில் சிகிச்சை

(கிளிநொச்சி)

இங்கிலாந்தில் இருந்து வருகை தந்த மருத்துவக் குழுவினர் -தியாக தீபம் திலீபன் மருத்துவக் குழுவினருடன் இணைந்து, திலீபன் மருத்துவமனைகளில் மருத்துவ சேவையை மேற்கொண்டு வருகின்றனர்.

ஐயங்கன் குளம், பூநகரி, புளியங்குளம், மாங்குளம் ஆகிய பிரதேசங்களில் உள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவ நிலையங்களில், கடந்த 12 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை பொது மருத்துவம், கண் மருத்துவம் போன்ற சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் பொது மருத்துவத்தில் 755 பேரும், கண் மருத்துவத்துக்கு 650 பேரும், சிகிச்சை பெற்றனர். 650 பேருக்கு கண் பரிசோதிக்கப்பட்டு, கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

# நிகொட் திட்ட அனுசரணையுடன் புதிதாக பாலங்கள் திறந்துவைப்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - முள்ளியவளை வீதியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 12.2 மில்லியன் நிதியுதவியுடன், நிகொட் திட்ட அனுசரணையுடன் புதிதாக அமைக்கப்பட்ட 3 பாலங்களும் போக்குவரத்துக்கு சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் சிவனடியார் தலைமையில் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ நிர்வாகசேவை வன்னிப் பிராந்தியப் பொறுப்பாளர் பிரியன், நிகொட் திட்டப் பணிப்பாளர் லங்கா நேசன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட தொழிற் சங்கங்களின் பொறுப்பாளர் துரையான் ஏற்றிவைத்தார்.

முதலாவது பாலத்தை லங்கா நேசனும், இரண்டாவது பாலத்தை நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணமும், மூன்றாவது பாலத்தை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணாவும் திறந்து வைத்தனர்.

இந்த மூன்று பாலங்களும், கல்வெட்டுக்களும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை வீதி அபிவிருத்தித் திணைக்கள தொழில் நுட்ப அலுவலர் ஜெயரூபன் நிகழ்த்தினார்.

வன்னிப் பிராந்திய முதன்மைப் பொறியியலாளர் யுவராஜலிங்கம், வீதி அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் இராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதேவேளை, கிளிநொச்சி அக்கராயன் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு பாலங்கள் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டன.

கோணாவில் - ஸ்கந்தபுரம் - புதுக்குடியிருப்பு வீதிகளிலும் பாலங்கள் திறந்து வைக்கப்பட்டன.

கிளிநொச்சி அரச அதிபர், அரசியற்துறைப் பொறுப்பாளர், நிகொட் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.




## குன்றும் குழியுமாக வேராவில் வீதி

கிளிநொச்சி பல்லவராயன் கட்டு வேராவில் வீதி - பழுதடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பூநகரிப் பிரதேச மக்கள் பூநகரி மன்னார், பிரதான வீதியிலுள்ள பல்லவராயன்கட்டுச் சந்தியிலிருந்து 12 கிலோ மீற்றர் தூரமான தேராவில் வீதி, புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன். இந்த வீதியிலுள்ள பாலங்கள் மிக மோசமாகக் காணப்படுவதால், இதனூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

# உழவு இயந்திர சாரதிகளுக்கான கலந்துரையாடலில் வீதி ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்குமாறு அறிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழீழ காவல்துறையால் உழவு இயந்திர சாரதிகளுக்கான வீதி ஒழுங்கு பற்றிய கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

இந்தப் பிரதேசத்தில் உழவு இயந்திரங்களின் பாவனை அதிகரித்துள்ளதன் காரணமாக, உழவு இயந்திர சாரதிகள் சிலர் - வீதி ஒழுங்குகளை சரியாகக் கடைப் பிடிக்காததால், விபத்துக்கள் ஏற்பட்டு மக்கள் உயிருக்கும், உடைமைக்கும் பெரும் இழப்புக்கள் ஏற்படுகிறது.

இந்த இழப்புக்களைத் தவிர்ப்பதற்கு - உழவு இயந்திர சாரதிகளுக்கும், உரிமையாளர்களுக்குமான வீதி ஒழுங்கு விதிமுறைகளை அறிவுறுத்தும் நிகழ்வு -முல்லைத்தவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெற்றன.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் காலை 10 மணிக்கு கோட்டப் பொறுப்பாளர் ஈழவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வீதி ஒழுங்குக் கருத்தூட்டல் நிகழ்வை புதுக்குடியிருப்பு காவல்துறை பொறுப்பாளர் ராஜசுகிதனன், உதவிப் பொறுப்பாளர் பிரதிப்குமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

புதுக்குடியிருப்பு சிவசுப்பிரமணிய வித்தியாலயத்தில் 1 மணிக்கு புதுக்குடியிருப்பு உழவு இயந்திர சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கருத்தூட்டல்நிகழ்வை புதுக்குடியிருப்பு காவல் பணிமனை பொறுப்பாளர் நிகழ்த்தினார்.

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில், முல்லைத்தீவு காவல்துறைப் பணிமனைப் பொறுப்பாளர் குணேஸ்வரன் - வீதி ஒழுங்குக் கருத்துரைகளை வழங்கினார்.

பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்தில், காலை 10 மணிக்கு நடைபெற்ற நிகழ்வில் -துணுக்காய் காவல்பணிமனை பொறுப்பாளர் கமல சிறீஸ்கரன் கருத்தூட்டல்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் - பாண்டியன் குளம் துணுக்காய் பிரதேச புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் மூர்த்தி, பாண்டியன்குளப் பிரதேசப் பொறுப்பாளர் மாறன், துணுக்காய் பிரதேசப் பொறுப்பாளர் புனிதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில், மாங்குளம் காவல்பணிமனைப் பொறுப்பாளர் லோகநாதன் கருத்துப்படங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் - மாங்குளம் பிரதேசப் பொறுப்பாளர் அணிஅழகன் கலந்துகொண்டார்.

வவுனியா வடக்கு கனகராயன் குளம் மகா வித்தியாலயத்தில் மாலை 3 மணிக்கு நடைபெற்ற நிகழ்வில், மாங்குளம் காவல் பணிமனைப் பொறுப்பாளர் லோகநாதன், உதவிப் பொறுப்பாளர் ரவீந்திரன் ஆகியோர் கருத்தூட்டல்களை வழங்கினர்.

இந்த நிகழ்வில், 500 இக்கு மேற்பட்ட உழவு இயந்திர உரிமையாளர்கள், சாரதிகள் கலந்து பயன்பெற்றனர்.

இந்த நிகழ்வுகளில் மட்காட்டில் பயணிகளை ஏற்றிச் செல்லுதல், இரவு வேளைகளில் வெளிச்சம் இன்றிச் செல்லுதல், இழுவைப் பெட்டிகளில் பாதுகாப்பற்ற முறையில் பொதிகளை ஏற்றுதல், பொதிகளின் மேல் பயணிகளை ஏற்றிச் செல்லுதல், மது போதையில் உழவு இயந்திரங்களைச் செலுத்துதல் ஆகிய விடயங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## முல்லைத்தீவில் வெடிபொருட்களால் மக்கள் அச்சம்

முல்லைத்தீவு - மாங்குளம், பெரிய புளியங்குளம் பகுதிகளில் புதைக்கப்பட்ட வெடிபொருட்களால் மக்கள் நடமாடுவதற்கு அஞ்சுகின்றனர்.

இந்தப் பிரதேசங்களை ஜெயசிக்குறு நடவடிக்கை மூலம் கைப்பற்றிய படையினர் - பெருமளவு வெடி பொருட்களைப் புதைத்துச் சென்றுள்ளனர்.

இதனால் இந்தப் பகுதியில் வெடிப்பொருட்களின் அச்சுறுத்தல் தொடர்ந்து நிலவி வருகிறது.

இங்கு மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் விவசாயப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

மாவீரர்நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையினரின் ஏற்பாட்டில் மாவட்ட ரீதியான, மாவட்ட விளையாட்டுத் துறையால் நடத்தப்படும் மாவீரர் வெற்றிக் கேடயத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் அடுத்த மாதம் முதல் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ளும் கழகங்கள் -மிக விரைவில் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறையுடன் தொடர்புகொள்ளுமாறு, கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜா தெரிவித்தார்.

## நிரந்தரக் கட்டடம் இன்றி அஞ்சல் அலுவலகம்

பூநகரி பிரதான அஞ்சல் அலுவலகம் - நிரந்தரக் கட்டடம் இன்றி, பெரும் இன்னல்களுக்கு மத்தியில் இயங்கி வருகிறது.

இந்த அஞ்சல் அலுவலகம் 1991 ஆம் ஆண்டு இராணுவத்தினர் மேற்கொண்ட வலம்புரி நடவடிக்கை மூலம் முற்றாகக் சேதமடைந்தது.

இதனைக் கட்டியெழுப்பப்படாமையால் தற்பொழுது தனியார் வீடொன்றில் பலசிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகிறது.

## வீதி விபத்து தொடர்பான கருத்தரங்கு

கிளிநொச்சியில் வீதி விபத்துகள் தொடர்பான கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளிலும், கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையம், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், அரச சார்பற்ற நிலையங்கள், மக்கள் கூடும் பொது இடங்கள் போன்றவற்றில் தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவால் விழிப்புணர்வுக் கருத்துகள் வழங்கப்பட்டு, விபத்துக்கள் மூலம் ஏற்படும் அனர்த்தங்கள், அவற்றை வெளிக்காட்டும் புகைப்படங்கள் என்பன காட்சிப் படுத்தப்பட்டு வருகின்றன.

## அம்புலன்ஸ் சாரதி இல்லை

பூநகரி கட்டம் 1 மருத்துவமனையில் - அம்புலன்ஸ் சாரதி இல்லாமையால், மேலதிக சிகிச்சை பெறவேண்டிய நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் வாகனம் வழங்கப்பட்டும், சாரதி ஒருவர் இல்லாத காரணத்தால், மேலதிக சிகிச்சை பெறவேண்டிய அவசர நோயாளர்களை, வேறு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல முடியாத அவல நிலை காணப்படுகிறது.

இதனால் நோயாளர்கள் உயிராபத்தை எதிர்நோக்கவேண்டிய நிலையில் காணப்படுகின்றனர்.

## இரு சிறுவர்கள் பாம்புக்கடிக்கு இலக்காகினர்

விசுவமடு பகுதியில் இரண்டு சிறுவர்கள் பாம்புக் கடிக்கு இலக்காகி, தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் விசுவமடு புன்னைநீராவியைச் சேர்ந்த ம.மகாஜெனன் (வயது 6), தர்மபுரம் 3 ஆம் யூனிற்றைச் சேர்ந்த இ.குகநேசன் (வயது 14) என்ற இருவருமே பாம்புக் கடிக்கு இலக்காகி, [illegible] சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ)

# முன்பள்ளி மாணவர்களின் பெற்றோருக்கு கருத்தரங்கு

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியன ஒருங்கிணைந்து- கண்டாவளைப் பிரதேச முன்பள்ளிப் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது.

முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்துரைகளை, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்ட இணைப்பாளர் இ.ராஜன், கண்டாவளைப் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் கனகேந்திரன், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் போ.நிலா, சிறுவர் நலன்திட்ட மாவட்ட விழிப்புணர்வு அலுவலர் கனகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் 50 முன்பள்ளி பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (இ)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் ஊற்றுப்புலம் பாடசாலை மாணவர்கள்

ஊற்றுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தற்காலிக கொட்டகைகளில் இயங்கி வருகிறது.

இந்தப் பாடசாலை - தரம் 7 வரையான வகுப்புக்களைக் கொண்டது. 150 மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றனர். இந்தப் பாடசாலையில் கல்வி கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவுள்ளது.

இதனால் மாணவர்கள் கல்வியில் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றனர். வேறு பிரதேசங்களிலிருந்து ஆசிரியர்கள் இந்தப் பாடசாலையில் தங்குமிட விடுதி இல்லாத காரணத்தால், கடமைக்கு வர மறுக்கிறார்கள். இவ்வாறான நிலையில் பாடசாலை அதிபர் வசதிகளற்ற கொண்டகை ஒன்றிலேயே வசித்து வருகிறார்.

இந்த நிலையைக் கருத்திற்கொண்டு, பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளுக்கு வசதிகளமைத்துத் தருமாறு பெற்றோர்கள் - சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளனர்.

## வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் பொன்விழா

கிளிநொச்சி - வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வு இடம்பெறவுள்ளது.

1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை - இந்த ஆண்டுடன் தனது 50 ஆவது ஆண்டைப் பூர்த்திசெய்வதையொட்டி, எதிர்வரும் 1 ஆம் திகதி பொன்விழாவைக் கொண்டாடப்படவுள்ளது.

இந்த நிகழ்வு 3 அமர்வுகளாக இடம்பெறும். முதலாவது அமர்வில் பொன்விழா சிறப்புமலர் வெளியீட்டு விழாவும், இரண்டாவது அமர்வில் பரிசளிப்பு விழா நிகழ்வும், மூன்றாவது அமர்வில் கலைநிகழ்வுகளும் இடம்பெறும் எனப் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## தொற்றுநோய் ஏற்படும் அபாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் மழைநீர் தேங்குவதால், தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் வடிகால் அமைக்கப்படாததால், வர்த்தக நிலையங்களின் முன்பாக மழைநீர் தேங்கிக் காணப்படுகிறது.

இதனால் தொற்று நோய்கள் பரவும் அபாயநிலை காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை*
*ஊக்கார் அறிவுடை யார்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## நியாயமற்ற குழப்பம்

சர்வதேச நிறுவனங்களும் உதவி வழங்கும் அமைப்புக்களும் நாட்டுக்குப் பொருத்தமற்ற பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்துவதாக நிதியமைச்சின் செயலாளர் டிபி ஜயசுந்தர புலம்பித் தீர்த்திருக்கிறார்.

இத்தகைய நிதி நிறுவனங்களும் அமைப்புக்களும் அதிகாரத்தன்மையுடன் நடந்து கொள்வதாகவும் - அதன் ஆலோசகர்கள் எஜமான் போல இங்கு செயற்படுவதாகவும் இவர் தெரிவித்திருக்கும் கருத்து சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடியதொன்றல்ல.

கடந்த இரண்டு தசாப்த காலமாக வெளிநாடுகள், நிறுவனங்களிடம் இருந்து கடன்களை வாங்கி ஆயுதங்களாக வாங்கிக் குவித்து யுத்தத்தை நடத்தியதன் விளைவுதான் இத்தகைய அமைப்புக்கள் இவ்வாறு நடந்துகொள்வதற்குக் காரணமாகும்.

வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கின்றன என்ற திமிர்த்தனத்தில் ஆயிரமாயிரம் கோடி ரூபாக்களை யுத்தத்துக்காக அரசாங்கம் செலவிட்டு வந்தது.

இதனால் நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்திற்குள் வீழ்ந்துகிடக்கும் நிலையில் - கடந்த சில வருடங்களாக சர்வதேச நிதி நிறுவனங்கள் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன.

தனியார் மயமாக்கல், பொருளாதாரசீர்திருத்தம் என்று தாம் வகுக்கும் திட்டங்களின்படிதான் அரசாங்கம் செயற்பட வேண்டும் என்றும் இல்லாவிடின் நிதியுதவிகளை வழங்க மாட்டோம் என்றும் இந்த நிறுவனங்கள் மிரட்டி வருகின்றன.

உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற இத்தகைய நிதி நிறுவனங்களும், அமைப்புகளும் - இலங்கைக்குப் பொருத்தமான பொருளாதார கொள்கைகள், திட்டங்களை வகுத்துக்கொடுக்கின்றனவா என்ற கேள்வி முக்கியத்துவம் வாய்ந்தது.

அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் இத்தகைய நிலையையிட்டு இப்போது குழப்பமடைவது எந்தவகையிலும் நியாயமற்றது. கடந்த காலத்தில் சந்தோசமாக நிதிகளை வாங்கி தமிழ் மக்களை ஒழிப்பதற்காக செலவிட்டு விட்டு இப்போது குறிப்பிட்ட நிறுவனங்கள் தமது கைவரிசைகளைக் காட்டத் தொடங்கியதும், புலம்பத் தொடங்கியிருக்கின்றது அரசாங்கம்.

இலங்கைக்குப் பொருத்தமான திட்டங்களை அமுல் செய்யவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு - அதை இன்னொருவருக்குத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு, இப்போது புலம்பி வருவதில் எந்தப் பயனும் இல்லை.

சர்வதேச நிதி நிறுவனங்களின் ஆலோசனைகளுக்கு அமைய செயற்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களால் நாட்டு மக்கள் பெரும் பொருளாதார சுமைகளுக்கு உட்பட நேர்ந்ததும் - தொழிற் சங்கப் போராட்டங்கள் ஏற்படக் காரணமாக அமைந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நாட்டில் பெருமளவு நெருக்கடிகள் - பிரச்சினைகளுக்கு சர்வதேசநிதி நிறுவனங்கள் வகுத்த கொள்கைத் திட்டங்கள் காரணமாக இருந்ததென்றால் எவ்வித சந்தேகமும் இல்லை.

அதைவிட நிதியமைச்சின் செயலாளர் கேள்வி எழுப்புவதைப் போல - சர்வதேச நிதி நிறுவனங்களில் சார்பில் நடைமுறைப் படுத்தப்பட்ட திட்டங்களின் மூலம் நாட்டிலிருந்து வறுமையை ஒழிக்க முடியவில்லையே.


அதைவிட நாட்டில் பொருளாதார அபிவிருத்தி பற்றிய சிந்தனைகளும்கூட இத்தகைய அன்னியத் தலையீடுகளால் வீழ்ச்சி அடைவதை எவரும் நிராகரிக்க முடியாது.

இப்படிப்பட்ட சர்வதேச நிறுவனங்களின் தலையீடுகள் இனிமேலும் தொடர்வதென்பது நாட்டின் சுதந்திரமான பொருளாதார செயற்பாடுகளை பாதிக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது.

இவ்வாறு இலங்கைக்கு புதிய பொருளாதாரத் திட்டங்களையும் கொள்கைகளையும் திணிக்கும் இத்தகைய நிறுவனங்களின் தலையீட்டிலிருந்து விடுபட அரசாங்கம் முனைகிறதா? என்ற கேள்வியை நிதியமைச்சின் செயலாளரின் கருத்துக்கள் அறிவித்திருக்கின்றன.

பொருத்தமான திட்டங்கள், கொள்கை வகுப்புக்கள் மூலம்தான் எந்தவொரு துறையிலும் முன்னேற்றம் காண முடியும். வெளியிலிருந்து ஆலோசனைகளும் உதவிகளும் இலவசமாக கிடைக்கின்றதென்பதற்காக அரசாங்கம் உதவிநிறுவனங்களை தொடர்ந்தும் தலையில் தூக்கி வைத்து ஆடினால் நாட்டின் இறைமையைக்கூட இந்த நிறுவனங்களிடம் விட்டுவிட நேரிடும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

## நாடும் நடப்பும்




# இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யப்பான்மக்களுக்கு கூட்டமைப்பு எம்.பி அனுதாபம்

இயற்கை அனர்த்தங்களால் யப்பானில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் அனுதாபம் தெரிவித்தார்.

யப்பானில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட சூறாவளி, பூகம்பம் என்பவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து இலங்கைக்கான யப்பானியத் தூதுவருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யப்பான் மக்கள் சூறாவளி, பூகம்பம் போன்ற அனர்த்தங்களால் அண்மையில் பாதிக்கப்பட்டதை அறிந்து நாம் கவலையடைந்துள்ளோம். யப்பானிய மக்களோடு ஈழத்தமிழர்கள் தம் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

எமது மக்கள் குரூரமான இன மேலாதிக்கத்தால் பாதிக்கப்பட்டு வரும் இந்தநேரத்தில் - இலங்கையில் நிலவும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து, தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இலங்கைத் தீவில் நலமுற வாழ்வதற்கு எடுக்கும் முயற்சிகளில் ஒரு முக்கிய பங்கை வகிக்கும் நாடு யப்பான். அத்தகையதொரு நாட்டில் இந்த அனர்த்தம் ஏற்பட்டிருப்பது ஈழத்தமிழர்களுக்கு மிகுந்த கவலையைத் தருகிறது.

முயற்சி நிறைந்த யப்பானிய மக்களுக்கு நாம் சொல்வது இதுதான். மற்றவர்களுக்கு நன்மை செய்யும் எண்ணம் கொண்ட உங்களுக்கு இப்படியான துன்பங்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்த மாட்டாது. உங்கள் மன வலிமையால் துன்பங்களிலிருந்து வெளியேறி புதிய வாழ்வை அமைத்துக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

மிக நீண்ட தூரத்தில் இருந்தாலும், உணர்வு ரீதியாக உங்களுடன் நின்று உங்கள் துன்பங்களில் பங்குகொள்கிறோம் என்பதை ஈழத்தமிழர்கள் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துக் கொள்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் நிபந்தனையை இலங்கை நிராகரித்தது!

(கொழும்பு)

பலாலி விமானத் தளத்தை தமது விசேட தொழில் நுட்பத்தின் அடிப்படையிலும், 360 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்து கொடுக்கத் தயார் எனவும், ஆனால இலங்கை தவிர இந்தியா மட்டுமே பலாலி விமானத் தளத்தைப் பாவிக்கமுடியும் என இந்தியா விதித்த நிபந்தனையை இலங்கை நிராகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதன் அடிப்படையில் கடந்த வாரம் இணக்கம் காணப்பட்ட இந்தோ லங்கா பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இந்த விடயம் இணைத்துக் கொள்ளப்படவில்லையென தகவலறிந்த தரப்பினர் தெரிவித்தனர்.

## ஜனாதிபதியின் இந்திய விஜயத்துடன் நாடாளுமன்ற பெரும்பான்மை 115 ஆக உயரும்

ஜனாதிபதி சந்திரிகா, இந்தியாவுக்குச் சென்று வந்தவுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற பெரும்பான்மை 115 ஆக உயர்த்தப்படும் என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா இந்த வார இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். அதன் போது, அவர் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வு குறித்து இந்தியத் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்பின்னர் அவர் நாடு திரும்பியதும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற பெரும்பான்மை மேலும் அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டார். ஏற்கனவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து வெளியேற்றப்பட்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நஜீப் ஏ மஜீத் ஆகியோர் அரசாங்க கட்சியில் இணைவதாக வெளியான தகவலின் அடிப்படையிலேயே அமைச்சரின் கருத்து வெளியிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

இதில் ரிசாத் பதியுதீனுக்கு வன்னி புனர்வாழ்வு அமைச்சு வழங்கப்படவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# இலங்கை வாழ் மக்கள் உரிய கௌரவம் அளித்தனர்

### இந்திய கடெற் படையினர் தெரிவிப்பு



இலங்கையில் வாழ்கின்ற மக்கள் தம்மை உரிய முறையில் மதிப்பளித்துக் கௌரவித்துள்ளதாக இந்திய கடெற் படைவீரர்கள் தெரிவித்தனர்.

கடந்த 15 ஆம் திகதி நேற்று முன்தினம் வரை இலங்கையில் இடம்பெற்ற இளைஞர் பரிமாற்றுச் செயற்திட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்திய தேசிய கடெற்படையினரைச் சேர்ந்த ஆறு வீரர்கள் இலங்கை வந்திருந்தனர்.

இலங்கையில் இடம்பெற்ற இளைஞர் பரிமாற்று செயற்திட்டத்தில் பங்குபற்றி விட்டு நாடு திரும்பிய இவர்களைக் கௌரவிக்கும் வைபவம் ஒன்று நேற்றுமுன்தினம் இந்திய தேசிய கடெற்படை அலுவலகத்தில் தேசிய கடற்படையின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் பி.பி.சிங் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில் - கடெற்படை வீரர் ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், இலங்கை மக்களது சமாதான செய்தியோடு நாம் நாடு திரும்பியுள்ளோம்.

எமது நாட்டில் இருப்பது போன்றே இலங்கையில் இருந்த காலப்பகுதியில் உணர்ந்து கொண்டோம். இலங்கை மக்களது உபசரிக்கும் பண்பு எமது மக்களைப் போன்றே உள்ளது எனத் தெரிவித்தார்.

இளைஞர் பரிமாற்றுத் திட்டத்தில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்த கடெற்படை வீரர்கள், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் உட்பட முப்படைத் தளபதிகளையும் சந்தித்து உரையாடினர். தெற்காசியாவைச் சேர்ந்த நாடுகளிலிருந்து 100 இற்கும் மேற்பட்ட கடெற்படைவீரர்கள் இந்தச் செயற்திட்டத்தில் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரநோக்கு

யாழவன்

# அரசின் பிரசாரங்களை முறியடித்த புலிகளின் ஐரோப்பிய விஜயம்





தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் அடங்கிய குழுவொன்று - ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயமொன்றை மேற்கொண்டு நாடு திரும்பியுள்ளனர். இந்த விஜயமானது சர்வதேச பிரதிநிதிகள் மத்தியிலே பூரணமானதொரு தெளிவை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இருக்க முடியாது. அரசினால் விடுதலைப் புலிகள் தொடர்பாகவும், அவர்களது சமாதான நகர்வுகள் தொடர்பாகவும் உருவாக்கப்பட்டிருந்த மாயத்திரையின் பெரும் பகுதி, இந்த விஜயத்தோடு அகன்று இருக்கும் என நம்ப முடியும்.

மீண்டும் மீண்டும் போரை ஆரம்பிப்பதிலேயே குறியாகவுள்ள அரசு- அதற்காக விடுதலைப் புலிகள் சமாதானம் மீது பற்றற்று செயற்படுகின்றார்கள் எனும் புனைவை பெருமளவிலே பல வழிகளிலும் உருவாக்கியிருந்தது. இதனைப் பெரும்பாலான சர்வதேச அரசுகளும், அரசு கூறுவதனால் நம்பத் தான் வேண்டுமெனும் துர்ப்பாக்கிய நிலையால் அதை நம்பினார்கள். இதனால் விடுதலைப் புலிகள் மட்டுமன்றி, தமிழ் மக்கள் அனைவரும் சில நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளும் இடை நடுவிலே முறிந்து போய் விடுமோ என்ற அச்சமான மனநிலை இன்றும் கூட அனேகமான தமிழ் மக்களுடைய மனங்களிலே நிலைத்துள்ளது. இந்த அச்சம் எழுவதற்கு முழுக் காரணமுமே, இத்தகைய அரசும் அதனோடு இணைந்த கட்சிகள் மற்றும் சர்வதேச வல்லரசு நாடுகளே. உண்மை நிலையை உணரத்தலைப்படாது, அரசு கூறுவதேயே மெய்யென நம்பி தமிழ் மக்களுக்கு எதிராக அறிக்கைகளை விடும் உலக நாடுகளும், தமது அறிக்கைகள் மூலமாக அச்சத்தையே ஊட்டி வருகின்றன. இந்த நிலையிலேதான் விடுதலைப் புலிகளின் அரசியற் குழுவினர் ஐரோப்பிய விஜய மொன்றை மேற்கொண்டு, அதன போது பல நாட்டு இராஜதந்திரிகளையும் சந்தித்து, சமாதான பயணத்தின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இவர்களது அனுபவப் பகிர்வுகளை பல வெளிநாட்டு பிரமுகர்களும் காது கொடுத்து கேட்டமையானது, மீண்டும் தமிழ் மக்கள் மத்தியிலே ஒரு நம்பிக்கை வலுவை ஊட்டியிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் தமது விஜயத்தின் போது எதனைப் பற்றி முக்கியமாக பேச வேண்டுமோ, அதனைப் பற்றியே பேசியமை கவனத்துக்குரிய விடயமாக விளங்குகின்றது. சமாதான முயற்சிகள் தொடரும் பட்சத்தில் உலக நாடுகள வழங்கவுள்ள பணத்திலேயே அரசு குறியாகவுள்ளது எனவும், எனவே சமாதான நகர்வுகள் சீரான போக்கை அடையும்வரை இந்த சர்வதேச உதவியை வழங்கக் கூடாது எனவும், அரசு இந்தியா உள்ளிட்ட சில நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வதால், அது படைவலுச் சமநிலையைப் பாதிக்கும். இது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிர் மாறானது எனவும், இடைக்கால நிர்வாக வரைபின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனத் தாம் விடுக்கும் கோரிக்கையிலுள்ள நியாயப்பாட்டையும், சர்வதேச பிரதிநிதிகளிடம் தெளிவாக விளக்கியமை நிச்சயமாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இந்த விளக்க நிலைப்பாடுகளிலே இன்று முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் - படைவலுச சமநிலை பேணல் என்பதாகும். அரசு அது விடயத்திலே அக்கறை எடுக்காமல், தனது படைவலு நிலையை மேலும் மேலும் அதிகரிப்பதிலே முனைப்பாகவுள்ளது. இதன் வெளிப்பாடுகளில் ஒன்றே, இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தின் இறுதி வடிவாக்கப்பட்ட ஒன்று என கருதப்பட்டாலும், இந்த ஒப்பந்தம் எதிர்காலத்திலே இலங்கையில் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கும் என்பதில் இரு கருத்துக் கிடையாது.

நாட்டிலே மீண்டும் போர் ஏற்படின் உதவி எனும் பெயரிலே மூக்கை நுழைக்கும் இந்தியா, சிறு உதவியைச் செய்து விட்டு, பெரியளவிலான பிரதிபலனை எதிர்பார்க்கும். அநதப் பிரதிபலனைப் பாவித்து, தனது பொருளாதார துறையையும், பாதுகாப்புத்துறையும் விஸ்தரிப்பதற்கு இந்தியா முயற்சிக்கும். இதுவே இலங்கையின் பாதுகாப்பைக கேள்விக்குள்ளாக்கும். இறுதியிலே இலங்கை இந்தியாவின் ஒரு மாநிலம் போன்று இயங்க வேண்டிய நிலையும் ஏற்படும். இதனால் அரசியல்லாபம் தேடும பல இலங்கைத் தலைவர்களின் கனவுகள் நனவாகிவிடும் வாய்ப்புக்கள் குறைந்து போகும்.

இதனைவிட முன்னர் 1987 ஆம் ஆண்டிலே ஏற்பட்ட இந்திய - இலஙகை உடன்படிக்கை காரணமாக, தமிழர் தாயகமான வடக்கு -கிழக்கு இந்திய இராணுவத்தினரின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள்ளே இருந்தது. இந்தக் கட்டுப்பாட்டுப் பலத்தைப் பாவித்த இராணுவத்தினர் தமிழமக்களுடைய உடமைகளையும, உயிர்களையும் அழித்த போது எழுந்த கொடிய போர்நிலையே நாளையும் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. இதுவும் இலங்கையின் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கும்.

இவற்றை உணராது இலங்கை அரசு பாதுகாப்பு உடன்படிக்கை எனும் பெயரிலே இந்தியாவிடம் இலங்கையை அடகு வைக்கிறது. போதாக்குறைக்கு அமெரிக்காவிடமும் வாய் கட்டி சேவகம் புரியும் கூலியாளைப் போல பணிந்து கிடக்கிறது. இந்த இரு அரசுகளுமே மனவியல் ரீதியாக, சமாதான விரோதிகளாக இருப்பதனாலே அவற்றினால் வழி நடத்தப்படும் இலங்கை அரசும் சமாதான விரோதியாகவே இயங்கும் இதுவும் இலங்கையின் பொருளாதாரப் பாதுகாப்பு உள்ளிட்ட பல விடயங்களின் பாதுகாப்பை கேள்விக் குள்ளாக்கும். இவ்வாறான தொரு நிலையிலிருந்து பார்த்தால் பாதுகாப்பு உடன்படிக்கை அவசியமானதா என்ற கேள்வி எழும்.

இதனைவிடுத்து விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை செம்மையாகக் கடைப்பிடித்தால், இலங்கை என்றுமே எல்லா விடயங்களிலும் பாதுகாப்பானதாக இருக்கும். இதனை உணராது அரசு செயற்படுகிறது எனபதை, விடுதலைப் புலிகள் தமது வெளிநாட்டுப் பயணத்தின் போது விளக்கியுள்ளார்கள். இதனால் உணமையை உணரத் தலைப்படும் சர்வதேச அரசுகள் சில - விடுதலைப் புலிகளின் பக்கம் நியாயமிருப்பதை உணர்ந்து, அரசைக் கண்டித்து அறிக்கைகளையும், கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றன. இது தமிழர்கள் அனைவருக்குமே கிடைத்த வெற்றியாகும்.

இந்த வெற்றி அமைதித் தீர்வுக்கான ஆரம்ப வெற்றியாக அமைந்து, மேலும் மேலும் பல வெற்றிகளை அடையவேண்டும் என்பதே, சமாதான விரும்பிகளுடைய அவாவாகும் ஐரோப்பிய விஜயத்தின் போது நோர்வேத் தரப்பினருடன் முக்கியமான பல விடயங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தரப்பு பேசியுள்ளது. அந்தப் பேச்சுவார்த்தைகளில் ஆராயப்பட்ட விடயங்கள் அரசுக்கு தெரியப்படுத்தப்பட்டும், தெரியப்படுத்தப்படவும் உள்ளன. இந்த விடயங்கள் தொடர்பாக அரசு எத்தகைய நடவடிக்கையை அடுத்த கட்டமாக எடுக்கின்றதோ, அதனை வைத்தே விடுதலைப் புலிகளும் தமது நகர்வையும் நகர்த்த வேண்டியதொரு சூழலே இன்று காணப்படுகிறது.

ஏனெனில் அரசுக்கு இன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளை விட, தலைக்கு மேல் பல விடயங்கள் சுமையாகவுள்ளன. விலைவாசியேற்றம், உள்வீட்டு குத்து வெட்டுக்கள், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் என சுமைக்கு மேல் சுமையாகவுள்ளன. இதிலே முக்கியமான பிரச்சினை எதுவெனில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலே எதனைத் தேர்தல் வாக்குறுதிகளாக வழங்க முடியுமோ, அதற்கான ஆயத்தங்களையே அரசு தற்போது எடுத்து வருகின்றது. விலைவாசியை குறைப்போம், சமாதானத்தை கொண்டு வருவோம் எனப் பேசிப்பேசியே வாக்குகளை கவருவதே அரசினுடைய எண்ணமாக இருக்கலாம்.

இதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு மிக விரைவிலே அரசினால் விடுதலைப் புலிகளுக்கு விடுக்கப்படுமென அரச வட்டாரங்களிலே தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் திடீர் அறிவிப்புக்கு காரணமாகவும், விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய பயணமே அமைந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

விடுதலைப் புலிகள் அரசின் பொய்ப் பிரசாரத்தை முறியடிக்கும் நடவடிக்கையில் தாமே நேரடியாக ஈடுபடத் தொடங்கியுள்ளதனால், அதனால் விளையும் எதிர் விளைவுகள் மோசமானவையாக அமையும் என்பதைப் புரிந்து கொண்ட அரசு சமாதானப் பேச்சுவார்த்தை விரைவிலே ஆரம்பமாகும் என கதை விடுகிறது. 'காத்திருந்து காத்திருந்து காலங்கள் போகுதடி' எனும் நிலைப்பாடே தொடருமாக இருந்தால் - சர்வதேசமும், விடுதலைப்புலிகளும் தமது நிலைப்பாடுகளிலே மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது தவிர்க்கப்பட முடியாததாக இருக்கும்.அதனால் விளையும் அனைத்து விளைவுகளுக்கும் - இலஙகை அரசும் அதன் இரடடைக் கணவர்மாரான இந்தியாவும் - அமெரிக்காவுமே பொறுப்பாகும்.

மருத்துவம்

# உலகில் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தும் வைரஸ்களினால் ஏற்படும் ஈரலழற்சி நோய்

உலகில் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தும் நோயாக ஈரல் அழற்சி என்னும் நோய் காணப்படுகின்றது. இந்த நோயானது ஈரலில் அழற்சியை ஏற்படுத்துகின்றது. எனவே ஈரல் அழற்சி (Hepatitis) என்கிறோம். ஈரல் அழற்சியை ஏற்படுத்தும் காரணிகள் பல அடையாளம் காணப்பட்டுள்ளன. A,B,C,D,E,F என்று பெயரிடப்பட்ட வைரசுக்கள் இந்தக் காரணிகளில் முக்கியமானவை இந்த வைரசுக்களினால் ஏற்படும் ஈரல் அழற்சி, வைரசு ஈரல் அழற்சி எனப்படுகின்றது.

வைரசு ஈரலழற்சியானது இலங்கையில் சட்டப்படி அறிவிக்கப்பட வேண்டிய நோய்களில் ஒன்றாகும். (Notifiable Disease) ஈரல் அழற்சி நோயாளர்களில் பெரும்பாலானோர் ஈரல் அழற்சி A இனால் பாதிக்கப்பட்டவர்களாவர். எனினும் ஈரல் அழற்சி A ஆனது (Hep -A) ஈரல் அழற்சி (Hep -B)யினைப் போல காவி நிலையையோ,நீண்டகால பின்விளை வுகளையோ ஏற்படுத்துவதில்லை. ஈரலழற்சி B ஏற்படுத்தும் பாதிப்புகளும் மரணங்களும் பாரதூரமான பொது சுகாதார பிரச்சினையாக கருதப்படுகின்றது.

எனவே இந்த நோய் பற்றி மக்கள் அனைவரும் பூரண அறிவைப் பெற்றிருக்க வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

### தொற்று நோய் விஞ்ஞானம் (Epidemology)

★ உலக சனத்தொகையில் ஏறத்தாழ 30 வீதமானோர் ஈரல அழற்சி B வைரசு (HBV) தொற்றினால் பாதிக்கப்பட்டதற்கான சான்றுகளைக் கொண்டுள்ளன.

★ 350 மில்லியன் பேர் ஈரழற்சி B இன் காவிகளாக உள்ளனர்.

★ ஒவ்வொரு வருடமும் ஒரு மில்லியன் மக்கள் ஈரலழற்சி B காரணமாகவும் அதனுடன் தொடர்பான நோய்கள் காரணமாகவும் மரணத்தைத் தழுவுகின்றார்கள்

★ இந்த நோயானது இலங்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த நோயை இலங்கையிலிருந்து விரட்ட 2003 ஆம் ஆண்டு முதல் விரிவாக்கப்பட்ட தடுப்பு மருந்து நிகழ்ச்சித் திட்டத்தில் (EPI) கொண்டுவர சுகா தார அமைச்சு தீர்மானித்தது.

காரணி - HBV தொற்றானது ஈரல் அழற்சி B வைரசினால் (HBV) ஏற்படுகின்றது. இது ஹெப்டி என் ஏ குடும்பத்தைச் சேர்ந்த உறையிடப்பட்ட இரு இழைய DNA வைரசு ஆகும்.

### HBV பரவும் முறைகள்

HBV ஆனது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பரவுகின்ற பிரப்தான வழிகள், இன்று உலகை அச்சுறுத்தும் ஆட்கொல்லி நோயான எயிட்சை ஏற்படுத்தும் HIV பரவும் வழிகளை ஒத்தாகும். ஆனால் HIV உடன் ஒப்பிடுமிடத்து 100 மடங்கு அதிகமாகத் தொற்றுகின்ற தன்மை கொண்டது.

**தாயிடமிருந்து குழந்தைக்கு**

★ தொற்றுள்ள தாயிடமிருந்து பிறகும் குழுந்தைக்கு

★ குழந்தை பிறக்கும்போது (பிரசுவ வேளையில்)

★ கருப்பையில் சிசு இருக்கும் போது (மிக அரிது)

★ தாய்ப்பால் மூலம் பரவாது

★ ஒரு பிள்ளையிலிருந்து இன்னொரு பிள்ளைக்கு

★ தாயிடம் இருந்து குழந்தைக்கு

★ ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு.

தோலிலுள்ள துவாரங்கள் உராய்வுகள் ஊடாக அல்லது சீதமென்சவ்வுகள் உடாக தொற்றுக்கள் குருதி அல்லது வேறு சுரப்புக்களுடன் தொடர்பு ஏற்படும்போது

★ கடிக்கும்போது தொற்றுள்ள உமிழ் நீர் மூலமாகவும் பரவலாம், தொற்றுள்ள ஏதாவது சுரப்புக்களில் பட்ட பொருட்கள் மூலமாகவும் பரவலாம்.

உ+ம் பகிர்ந்துகொள்ளப்படும் துவாய் பற்தூரிகை போன்றவை.

★ ஊசி மூலமாக மென்சவ்வுகளுடாக,

★ பரிசோதிக்கப்படாத இரத்தம் ஏற்றப்படும்போது

★ பூரணமாக தொற்று நீக்கப்படாத முற்றாக தொற்று நீக்கப்படாத/ சத்திரசிகிச்சை/ பற்சிகிச்சை உபகரணங்களை மீண்டும் பாவிக்கும் போது

★ போதைப்பொருள் பாவனையாளர்கள் ஊசிகளை/ தம்மிடையே பகிர்ந்துகொள்ளும் போது

★ பாலியல் உறவின்போது

★ தொற்றுள்ள ஒருவருடன் பாதுகாப்பில்லாத பாலியல் உறவில் ஈடுபடும்போது பரவுகின்றது

மேற்கூறிய காரணங்களால் மட்டுமே ஈரலழற்சி B (Hep B) நோயானது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப்பரவும்.

HBV ஆனது வயது, பால், இன வித்தியாசம் காட்டாது எவ்வயதினருக்கும் எந்த/ பாலாருக்கும், எவ் இனத்தவருக்கும் ஏற்படக்கூடிய ஓர் கொடிய நீண்ட கால (Chronic) நோயாகும். இதன் நோயரும்பு காலம் 6 கிழமைகள் முதல் 6 மாதங்கள் வரையாகும். HBV தொற்றுக்குள்ளான ஒருவருக்கு [illegible] நோய் விளைவுகள் ஏற்படலாம். நோய் ஒருவரிடம இருந்து இன்னொருவருக்கு தொற்றிய சில காலங்களில் பின்வரும் அறிகுறிகளைக் காட்டலாம்.

1. கடுமையான செங்கண்மாரி
2. கடும் மஞ்சள் நிறமான சிறுநீர்
3. பசியின்மை
4. சோர்வு
5. கடுமையான களைப்பு
6. வலது பக்க மேல் வயிற்றில் நோவு

போன்ற அறிகுறிகளைக் காட்டலாம். கடுமையான HBV தொற்றின் குணங்குறிகளை மற்றைய வைரசு ஈரல் அழற்சி வகைகளின் குணங்குறிகளிலிருந்து வேறுபடுத்தி அறிய முடியாது.

### தடுப்புமுறைகள்

★ மருத்துவ உபகரணங்களைப் பாவிக்கும்பொது சர்வதேச முன் அவதான முறைகளை (Universal precautions) பின்பற்றுவதன் மூலம் ஊசிகள், சத்திரசிகிச்சை உபகரணங்கள், பற்சிகிச்சை உபகரணங்கள் போன்றவற்றின் மூலம் தொற்றுவதைத் தடுக்கலாம்.

★ தானமாக வழங்கப்பட்ட குருதியை HBC காட்டிகளுண்டா என்ற பரிசோதனை செய்து குருதியை மாற்றீடு செய்வதன் மூலம் தடுக்கலாம்.

★ பாதுகாப்பான பாலியல் தொடர்புகளை (உடல் உறவுகளை) வைப்பதன் மூலம் தடுக்கலாம்

Hep B தடுப்பு மாற்று மூலமாக நோய் எதிர்ப்பு சக்தியை வழங்குவதன மூலம் எந்த வழிமூலமும் HBV தொற்று பரவுவதை தடுக்கக்கூடிய ஒரு ஆற்றல் வாய்ந்த முறையாகும்.

மேற்கூறப்பட்ட முறைகளில் HeP B தொற்றைத் தடுத்து எமது சமுதாயத்தை வளமான சமுதாயம் ஆக்கும் நோக்குடன் 2003 அமுல் செய்யப்பட்ட விரிவாக்கப்பட்ட தடை மருந்தேற்றல் நிகழ்ச்சித் திட்டமானது HBV ஐயும் கொண்டது.

இந்தத் திட்டமானது 2005 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் வடக்கு - கிழக்கு, ஊவா மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. எனவே இதனை 2005 தை மாதம் தொடக்கம் எமது குழந்தைகளுக்கும் முக்கூட்டு வக்சினுடன் இணைத்து வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

எனவே ஒவ்வொரு தாய்மாரும் இதனைக் கருத்திற்கொண்டு உங்கள் பிள்ளைக்கு முக்கூட்டு வக்சின் 1 ஆவது இன் போது HeP B ஐ ஐக் கொடுக்கவேண்டும். இதனைத் தாய்மார்கள் அனைவரும் கருத்திற் கொள்ளவேண்டும். பின் வரும் தொடர் ஒழுங்கில் HBV வழங்கப்படும் ஒரு குழந்தை பிறந்து 2 ஆம், 4 ஆம் 6 ஆம் மாதங்களில் அதாவது DPTI, HBV 1 உம் முதல் 2 ஆம் மாதத்திலும் பின் DPT II, HBV II உம், அடுத்து 4 ஆம் மாதத்திலும் பின் DPT III, HBVIII உம் அடுத்து 6 ஆம் மாதத்திலும் வழங்கப்படும் என்பதே சரியான முறையாகும் இதன் படி குழந்தை இந்தத் தடுப்பு மருநது பெறுவதை தாய்மார்கள் உறுதி செய்து இனிவரும் காலங்களில் Hep B இனை இலங்கைத் தீவிலிருந்து முற்றாக ஒழிக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈராக் தலைநகர் பாக்தாத்தில்

# அவுஸ்ரேலிய இராணுவ தொடரணிமீது தற்கொலை கார்க்குண்டுத் தாக்குதல்!



(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் அமைந்துள்ள அவுஸ்ரேலியத் தூதரகத்திற்கு அருகில், அவுஸ்ரேலிய இராணுவத் தொடரணிமீது நடத்தப்பட்ட கார்க்குண்டு தற்கொலைத் தாக்குதலில் மூன்று ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதுடன், மேலும் எட்டுப்பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலில் தமது படையினர் மூவருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டதாக அவுஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். அத்துடன் ஈராக்கில் நிலைகொண்டுள்ள அவுஸ்ரேலியப் படையினர்மீது நேரடியாக நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் அவுஸ்ரேலிய இராணுவத் தொடரணியை இலக்கு வைத்தே நடத்தப்பட்டதாக, ஈராக்கின் உள்துறை அமைச்சுப் பேச்சாளரான கேணல் அட்னான் அப்துல் ர.்மான் தெரிவித்தார். இந்தத் தாக்குதலாளி-காருடன் அருகிலுள்ள கார்த் தரிப்பிடத்தில் மறைந்து நின்றதாகவும், இராணுவத் தொடரணி வந்தவேளை, தாக்குதலை நடாத்தியதாகவும் அமெரிக்க இராணுவ அதிகாரியான மேஜர் ஸ்கொட் ஸ்ரேஞ்சர் தெரிவித்தார்.

இதேவேளை மேற்குக் கரையிலுள்ள திக்றிற் ஆற்றுப் பகுதியில் மிகப்பெரியளவில் புகைமண்டலம் எழுந்துகொண்டிருந்ததாகவும், இவற்றின் மேலே அமெரிக்க ஹெலிகொப்டர்கள் வட்டமிட்டுக்கொண்டிருந்ததாகவும் - ஆனால், என்ன சம்பவம் இடம்பெற்றதென்பது தெரியவில்லையெனவும் தகவல்கள் தெரிவித்தன.

இதனிடையே, நேற்றைய தினம் பாக்தாத்தின் வடக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் இராணுவ ரோந்து வாகனத் தொடரணிமீது வீதியோரக் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டபோதும் எவ்வித இழப்புகளும் ஏற்படவில்லையெனவும், ஒரு ஆயுத வாகனம் மட்டும் சிறு சேதத்திற்குள்ளானதாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

## ஈராக்கில் 50 படையினர் படுகொலை

# உள்வீட்டு நாசவேலை காரணமா?

### ஈராக் அதிகாரிகள் சந்தேகம் தெரிவிப்பு



ஈராக்கில் நேற்று முன்தினம் 50 படையினர் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு உள்வீட்டுச் சதியே காரணமாக இருக்கலாமெனத் தாம் சந்தேகிப்பதாக ஈராக்கிய பாதுகாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட 50 படையினரும் தமது அடிப்படைப் பயிற்சியை நிறைவுசெய்த பின்னர் அவர்களது வீடுகளுக்கு மினி பஸ்ஸில் செல்வதனைக் கிளர்ச்சிவாதிகள் கணடிப்பாக அறிந்திருக்க வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஈரானிய எல்லைக்கருகிலுள்ள ஈராக்கின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பயிற்சி முகாமிற்கு மிக நெருக்கமாகவே இந்தப் படையினரின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சுட்டுக்கொல்லப்பட்ட படையினரின வாகனம் பதுங்கித் தாக்குதலுக்கே இலக்கானதாக உள்ளூர்ப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலை படையினருக்குள் இருந்த சிலர் அல்லது ஒரு குழுவினரே நடத்தியிருக்க வேண்டு மெனவும், இதனைத் தவிர ஆயுதபாணிகள் படையினர் குறித்து அறிந்திருக்க வாய்ப்பில்லையெனவும் தியாலா மாகாண பிரதி ஆளுநா அக்கில் ஹமீட் அல் அடில் - அராபிய தொலைக்காட்சிக்குத் தெரிவித்தார்.

இதேவேளை அபுமுசாப் அல் சர்காவி தலைமையிலான கிளர்ச்சிவாதிகளால் நடத்தப்படும் இணையத்தளம் மூலம், தாமே இந்தப் படையினர் மீதான தாக்குதலை நடத்தியதாக அந்த அமைப்பு உரிமை கோரியுள்ளது.

இந்தத் தாக்குதலின் பின்னர் இந்தப் படையினர் சென்ற இரண்டு வாகனங்களையும், அவர்களது சம்பளப் பணத்தையும் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் இணையத்தளம் மூலமே அல் சர்காவி அமைப்பு தெரிவித்தது.

# வடகொரியா பேச்சுக்கு வருவதற்கு சீனா அழுத்தம் கொடுக்கவேண்டும்

### கொலின் பவல் தெரிவிப்பு



(பீஜிங்)

வடகொரியா அணு ஆயுதத் திட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கான பேச்சுக்களில் பங்கேற்க - சீனா அழுத்தம்கொடுக்க வேண்டுமென அமெரிக்க ராஜாங்கச் செயலர் கொலின் பவல், சீனாவைக் கேட்டுள்ளார்.

அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் பேச்சுக்களில் வடகொரியாவைப் பங்கேற்கவைக்கும் நோக்கில் கொலின் பவல் சீனாவுக்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டார்.

அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக அமெரிக்காவுடனோ, அயல் நாடுகளுடனோ பேசசுக்களை நடத்துவதற்கு வடகொரியா மறுப்புத் தெரிவித்துவருகின்ற நிலையில் கொலின் பவல் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் - சீன ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்தித்து உரையாடியுள்ளார். இதன்போது கருத்துத் தெரிவித்த கொலின் பவல் - அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களில் மீண்டும் வடகொரியா கலந்துகொள்வதற்கு இதுவே ஏற்ற சந்தர்ப்பமாகும்.

வடகொரியாவிடம் உள்ள அணு ஆயுதங்களைக் களைவதற்கான பேச்சுக்களை வடகொரியா தொடரவேண்டுமென அமெரிக்கா விரும்புகின்றது. வடகொரியா இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளை உடனடியாக சீனா மேற்கொள்ளவேண்டும்.

அத்துடன் இந்தப் பேச்சுக்களை ஆறு கட்டங்களாக மேற்கொள்ள வேண்டுமென அமெரிக்கா விரும்புகின்றது எனவும் தெரிவித்தார்.

மேலும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கு வடகொரியாவுக்கு உள்ள ஒரேயொரு வழி இதுவாகும் எனத் தெரிவித்தார். வடகொரியாவின் அணு ஆயுதத் திட்டங்களைக் கட்டுப்புடுத்துவதற்காக மூன்றுகட்டப் பேச்சுக்கள் ஏற்கனவே இடம்பெற்ற நிலையில் தொடர்ந்து பேச்சுக்களில் பங்குபற்ற கடந்த செப்ரெம்பரில் வடகொரியா மறுத்துவிட்டது:

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சிவேட்பாளர் ஜோன் ஹெரி -

புஷ்ஷினது அரசாங்கம் வடகொரியாவின் அணு ஆயுதத் திட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் தோல்வி கண்டுள்ளது எனக் குற்றச்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# காண்யுனிஸ் அகதிமுகாம் பகுதியில் இஸ்ரேல் படையினர் தாக்குதல்!

### 14 பேர் பலி! 33 பேர் காயம்!!



(டெல்அவில்)

காஸாவின் தென்பகுதியிலுள்ள காண்யுனிஸ் அகதிமுகாம் பகுதியில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டதுடன் 33 பேர் காயமடைந்தனர்.

இந்தப் பகுதியில் மிகப்பெரிய விமானத் தாக்குதலை நேற்றுமுன்தினம் நடத்திய பின்னர் இஸ்ரேல் படையினர் டசினுக்கு மேற்பட்ட தாங்கிகளுடன் இந்த அகதிமுகாம் பகுதிக்குள் பிரவேசித்தனர்.

இஸ்ரேல் பகுதிக்குள் நடத்தப்படும் மோட்டார் தாக்குதலை நிறுத்துவதற்கான முயற்சியே இந்தப் படை நடவடிக்கையென இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

காஸாப் பகுதியிலுள்ள இஸ்ரேல் குடியிருப்பாளர்களை விலக்குவது தொடர்பான விவாதம் இஸ்ரேல் நாடாளுமன்றில் இடம்பெற்றுக் கொண்டிருக்கையிலேயே இந்தப் படை நடவடிக்கை இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.


காஸாப் பகுதியில் பெயர் குறிப்பிடப்படாத உளவு விமானம் நான்கு ஏவுகணைகளை வீசித்தாக்கியதாக தகவல்கள் தெரிவித்தன. இந்த ஏவுகணைகளில் ஒன்று பலஸ்தீன படையினரின் நிலைகள் மீது விழுந்து வெடித்ததில் இருவர் கொல்லப்பட்டனர். மற்றயது வீதியோரமாக குண்டினைப் புதைத்துக்கொண்டிருந்தவர்கள் மீது நடத்தப்பட்டதாக ஏ.எப்.பி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இஸ்ரேல் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு பலஸ்தீனர் கொல்லப்பட்டார். உயிரிழந்தவர்களில் பொதுமக்களும் அடங்குவதாக பலஸ்தீன பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். ஜெவிஸ் குடியிருப்பு பகுதி மீதான தாக்குதல் நிறுத்தப்படும்வரை படையினர் கான்யுனிஸ் பகுதியில் நிலைகொண்டிருப்பரென இஸ்ரேல் இராணுவம் ரொய்டர் செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்தது. அத்துடன், கான்யுனிஸ பகுதியிலிருந்து இந்தவாரம் மட்டும் 28 மோட்டார்த் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை காஸாப் பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் சகல யூதக் குடியிருப்புக்களுக்கும் நட்டஈடு வழங்குவதற்கு இஸ்ரேலிய அமைச்சரவை நேற்றுமுன்தினம் ஒப்புதல் வழங்கியுள்ளது. காஸாப் பகுதியிலிருந்து யூதக் குடியிருப்புகளை விலக்கும் தனது திட்டத்தை பிரதமர் ஷரோன் நேற்று இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். இன்று இவர் வலதுசாரிக் கட்சிகளின ஆதரவுடன் இதற்கான ஆதரவைப் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் உல்றா - ஒதோடொக்ஸ் கட்சியைச் சேர்ந்த 11 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமர் ஷரோனின் இந்தத்திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கப் போவதாக தெரிவித்தனர்.

# ஆப்கான் ஜனாதிபதி தேர்தல்; ஹர்சாய் வெற்றிபெற்றார்!



(காபூல்)

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் இடைக்கால ஜனாதிபதியாக இருக்கும் ஹமீட் ஹர்சாய் வெற்றிபெற்றார்.

92.1 சதவீத வாக்குகள் எண்ணப்படடதில், கர்சாய்க்கு ஆதரவாக 41 லட்சத்து 5 ஆயிரத்து 122 வாக்குகள் கிடைத்துள்ளன. இது மொத்த வாக்குகளில் 54.9 சதவீதம் ஆகும்.

இதுதான் நாங்கள் எதிர்பார்த்தது. இறுதித்தீர்ப்பு வரும்வரை நாங்கள் காத்திருப்போம் என்று கர்சாய் ஆதரவாளர் ஒருவர் கூறினார்.

இறுதி முடிவு இன்று வெளிவரும் என அறிவிக்கப்படுகிறது.

# செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுச் செய்தி

**கீழே பெயர் குறிப்பிட்ட நபர்கள் அருகிலுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் காரியாலயத்துடன் (சனி, ஞாயிறு, பொது விடுமுறை நாடகள் தவிர்த்து) தொடர்புகொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர்.**

| | |
|---|---|
| 1.K.தியாகராசா | பண்ணை வீதி, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்துறை |
| 2.நாகராசா நவரட்ணராசா | மே/பா பத்மநாதன் மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். |
| 3.கலாவதி முருகுப்பிள்ளை | மே/பா விவேகானந்தன் இல.817, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| 4.தம்பிராசா ஸ்ரீஸ்கந்தராசா | உடுத்துறை, வேம்படி தாளையடி. |
| 5.எஸ்.சந்திரன் | மட்டுவில் கிழக்கு, பணிக்கர்வளவடி, சாவகச்சேரி. |
| 6.க.பிரான்ஸிஸ் | டச் வீதி, உடுவில், சுன்னாகம். |
| 7.மரியதாஸ் மேரி திரேசா | இல.79, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். |
| 8.சின்னத்துரை பரமேஸ்வரி | நாவலர் பாடசாலை ஒழுங்கை, 'குமரக்கோட்டம்' கோப்பாய் தெற்கு, கோப்பாய். |
| 9.சண்முகம் செல்லமுத்து | தொல்புரம் மேற்கு, சுழிபுரம். |
| 10.அருளானந்தராஜா பத்மராணி | நாகர்கோவில் கிழக்கு, நாகர்கோவில். |
| 11.சுப்பிரமணியம் சர்மா | மட்டக்களப்பு. |

(சி-3284)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மட்டக்களப்பு பத்திரிகையாளருக்கு கருணா குழுவினர் எச்சரிக்கை!

(மட்டக்களப்பு)

தினக்குரல் பத்திரிகையின் மட்டக்களப்பு மாவட்ட நிருபரும், மாவட்ட முகாமையாளருமான சீ.சந்திரப் பிரகாஷ்"க்கு கருணா குழுவினரால் அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சந்திரப்பிரகாஷ் தனது வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த கருணா குழுவினர் கைத்துப்பாக்கியைக் காட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் நிகழ்வுகள் ஒன்றிற்கும் செய்தி சேகரிக்கச் செல்லக் கூடாது என்றும், தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெளியிடப்படும் செய்திகளை பத்திரிகையூடாகப் பிரசுரிக்கக்கூடாது எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதே சமயம் கடந்த மே மாதம் மூத்த பத்திரிகையாளரான ஐயாத்துரை நடேசன் மட்டக்களப்பில் வைத்து கருணா குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மட்டக்களப்பு நகரத்தின் பல்வேறு பகுதிகளிலும் விடுதலைப் புலிகளைத் தாக்கியும், கருணா அணியினருக்கு எதிராகச் செய்திகளை வெளியிடும் உள்ளூர் ஊடகவியலாளர்களை எச்சரித்தும் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

இத்துண்டுப் பிரசுரங்கள் கருணா அணியின் பெயரால் ஒட்டப்பட்டுள்ளன.

கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் மட்டக்களப்பு நகரில் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளுக்கு தடைவிதித்திருந்த கருணா குழுவினர் பல ஆயிரம் பத்திரிகைப் பிரதிகளை எரித்துமிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணா குழுவினர் இராணுவத்தினரின் ஆதரவுடன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 'அந்திராக்ஸ்' அச்சத்தால் கனடா தூதரகம் மூடப்பட்டது!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள கனேடிய தூதரகம் அந்திராக்ஸ் அச்சம் காரணமாக காலவரையறையின்றி தற்காலிகமாக மூடப்பட்டது.

விசா எடுப்பதற்காக பௌத்த பிக்கு ஒருவர் சமர்ப்பித்த கடவுச்சீட்டில் வெள்ளைத்தூள் காணப்பட்டதால் எழுந்த சந்தேகத்தால் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ள நேரிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடவுச்சீட்டைப் பாதுகாக்க பவுடர் இட்டு வைத்திருந்ததாக விசாரணைகளின் போது இந்த பௌத்த பிக்கு தெரிவித்தார்.

கடவுச்சீட்டில் காணப்பட்ட பவுடர், பரிசோதனைக்காக பொரளையிலுள்ள அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்கள் காரணமாக மூடப்பட்ட தூதரகம், வெகுவிரைவில் மீண்டும் திறக்கப்படும் என்று தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இன்று தூதரகத்தை மீண்டும் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது என்று கனேடியத் தூதரகப் பேச்சாளர் கூறினார்.

## விலைக்கட்டுப்பாட்டுபிரிவினர் கோதுமை மாவுக்கு விலை நிர்ணயம்!

கோதுமை மாவின் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக நிதித் துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி ஒரு கிலோ பச்சைக் கோதுமை மாவின் விலை வன்னியில் 22 ரூபா 90 சதமாகவும், யாழ்ப்பாணத்தில் 23 ரூபா 50 சதமாகவும் விற்பனை செய்யப்படவேண்டும்.

இதேவேளை, வெதுப்பக மா - வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும் 28 ரூபா 50 சதத்துக்கு விற்பனை செய்யவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய விலையின் அடிப்படையில் இன்றுமுதல் மா விற்பனை செய்யப்படவேண்டும் எனவும், இந்த விலைக்குக் கூடுதலான விலையில் விற்பனை செய்யவேண்டாம் எனவும் விலைக் கட்டுப்பாட்டுப் பொறுப்பாளர் கா.செழியன் தெரிவித்தார்.

## சிகிச்சை முடித்து திரும்பினார் சூசை

(கிளிநொச்சி)

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை வெளிநாட்டில் சிகிச்சை பெற்ற பின்னர் நேற்று வன்னிக்குத் திரும்பினார்.

இதேவேளை ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளில் சிலரும் நேற்று நாடுதிரும்பினர்.

கேணல் சூசையும், ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும் நேற்றுக் காலை கொழும்புக்கு வந்துசேர்ந்து, ஹெலிகொப்ரர்மூலம் கிளிநொச்சிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

ஐரோப்பிய விஜயத்தில் கலந்துகொண்ட நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மட்டு.அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் ஏ-9 வீதியூடாக கிளிநொச்சிக்குச் சென்றடைந்தனர்.

ஐரோப்பிய விஜயத்தை மேற்கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் இந்தமாத இறுதியில் நாடுதிரும்புவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வெள்ளியன்று சந்திரிகா திருமலைக்கு விஜயம்!

ஜனாதிபதி சந்திரிகா எதிர்வரும் வெள்ளிக்கிழமை திருகோணமலைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரியவருகிறது.

படையினரின் சேவையைப் பாராட்டி வழங்கப்படும் 'ரணவி' விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி சந்திரிகா அங்கு செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது.

திருகோணமலை கடற்படைத் தளத்தில் நடைபெறவுள்ள இந்த விருது வழங்கும் நிகழ்வையொட்டி அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## பெற்றோல் போத்தல் தீப்பற்றி இளைஞருக்கு எரிகாயம்!

பெற்றோல் போத்தல் தவறுதலாக வீழ்நது தீப்பற்றிக்கொண்டதில் இளைஞர் ஒருவர் தீக்காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செல்வபுரம் - முல்லைத்தீவில் இடம்பெற்றது. சம்பவத்தின்போது 25 வயதான அன்ரன் ஜெறாட் என்பவரே காயமடைந்தவராவார்.

கடையொன்றில் பெற்றோல் வாங்கிச் செல்ல முற்பட்ட சமயம், பெற்றோல் போத்தல் வீழ்ந்து சிதறியதால் தீப்பற்றி கடை முற்றாக எரிந்தது.

சம்பவத்தில் தீக்காயங்களுக்குள்ளான இளைஞன், புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### மட்டக்களப்பில் கிரனேட்...

ருவரைத் திருமணம் முடித்து நீண்டகாலமாகவே அங்கு வாழ்ந்து வந்தவராவார்.

இந்த நிலையில் நேற்று இரவு 9.30 மணியளவில் இவரின் வீட்டுக்குச் சென்ற, சிலர் கிரனேட் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர். இந்தத் தாக்குதலால் படுகாயமடைந்த இவரை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போதிலும் அவர் அங்கே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்புத் துறைமுகமருகே நடமாடியவர் கைது!

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்துக்கு அருகிலுள்ள கடற்படையினரின் முகாம் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இளைஞர் ஒருவரை கடற்படையினர் கைதுசெய்துள்ளதாகப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னையா - ஹேமானந்த் என்பவரே கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவித்த படைத் தலைமையகம், இவர் கடந்த 22 ஆம் திகதி மாலை 7.15 மணியளவில் கடற்படையினரின் முகாம் பகுதியில் உலாவித் திரிந்தவேளை இவரில் சந்தேகம்கொண்ட படையினர் இவரைக் கைதுசெய்தனர் எனவும் தெரிவித்தது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர் புறக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டபோதும், இவர் அப்பகுதியில் தான் நின்றதற்கான காரணத்தைச் சரியாகத் தெரிவிக்காததனால் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் படைத் தலைமையகம் தெரிவித்தது.

## நாடாளுமன்ற உணவுச்சாலையில் உணவுகள் 10 மடங்கால் உயர்வு!

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் கடமையாற்றுபவர்களுக்கு வழங்கப்படும் உணவுகளின் விலைகள் பத்து மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஆறு ரூபாவாக இருந்த காலை உணவு அறுபது ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பதினைந்து ரூபாவாக இருந்த மதிய உணவு நூற்றி ஐம்பது ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தெரிவுக்குழுக் கூட்டத்தில் நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் பிரதியமைச்சர் மஹிந்த அமரவீர முன்வைத்த யோசனைக்கு அமையவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

### மட்டக்களப்பில்...

சேர்ந்த கந்தசாமி வசந்தன் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிப் போராளியான குணம் எனப்படும் செல்லத்தம்பி இராசதுரையை அவரது வீட்டுக்குத் தேடிச்சென்ற ஆயுதக் குழுவொன்றே இவரைச் சுட்டுக் கொலை செய்ததாகக் கூறப்படுகிறது.

வீடியோ படம் காட்டிப் பிழைப்பு நடத்தும் இந்த இளைஞர், குறிப்பிட்ட வீட்டுக்கு வீடியோப் படம் காட்டச் சென்ற சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இரவு 8 மணியளவில் 3 ஆயுதபாணிகள் குணத்தைத் தேடி அவரது வீட்டுக்குச் சென்றபோது வீட்டிலிருந்தவர்கள் கதவைத் திறக்கவில்லை.

இதனால், திரும்பிச் சென்ற ஆயுதபாணிகள் ஒரு மணித்தியாலம் கழித்து அயல் வீட்டில் குடியிருக்கும் லீலா என்ற பெண்மணியைக் கூட்டிவந்து, அவர்மூலம் அழைத்தபோது கதவு திறக்கப்பட்டது.

அந்தநேரம் வீட்டுக்குள் நுழைந்த ஆயுதபாணிகள் தேடுதல் நடத்திய பின்பு இந்த இளைஞர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்சென்றனர்.

[illegible] பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உயர்பாதுகாப்பு வலயத்தில் விவசாய நடவடிக்கைகள் குறித்து ஆராய சட்டமா அதிபருக்கு பணிப்பு!

(கொழும்பு)

பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட பகுதிகளில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான வாய்ப்புக் குறித்து ஆராயுமாறு உயர்நீதிமன்றம் நேற்று சட்டமா அதிபருக்கு பணிப்புரை விடுத்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா உட்பட விவசாயிகள் சிலர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை ஆராய்ந்த பின்னர், உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

தங்களது காணிகளில் விவசாயத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கவேண்டுமென மனுதாரர்கள் மனுவில் கோரியிருந்தனர். இராணுவத் தளபதியின் ஆலோசனையைப் பெற்று நீதிமன்றத்துக்கு தகவல்களைத் தெரிவிக்குமாறு உயர்நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகி மேலதிக தகவல்களை வழங்குமாறு உயர் நீதிமன்றம், சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

### கண்காணிப்புக்குழு...

விக்கப்படுகிறது.

இதேவேளை - போர்நிறுத்தக் கண்காணிபுக்குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்படவிருக்கும் வோன விங்கின், நேற்று திருகோணமலைக்குச் சென்று இராணுவ அதிகாரிகள், பொலிஸார், கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து மாவட்ட நிலைமை குறித்து ஆராய்ந்தார்.

நேற்றுக்காலை திருகோணமலைக்குச் சென்றிருந்த வோன் விங்கின் - பொலிஸ் உயரதிகாரிகளை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் சந்தித்தார்.

இதன்பின்னர் 222 ஆவது டிவிசன் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சாலிய குலதுங்க மற்றும் படையதிகாரிகளை கட்டளை தலைமை அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தொடர்ந்து கடற்கண்காணிப்பில் ஈடுபட்டிருக்கும் கண்காணிப்புக்குழுவினரை மாவட்டக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

இந்த விஜயத்தின்போது திருகோணமலை மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்தும், இந்தப் பகுதியில் யுத்தநிறுத்த மீறல்களைத் தணிப்பதற்கு கண்காணிப்பாளர்களும் படையினரும் முன்னெடுக்க இணைந்து முகங்கொடுக்க வேண்டிய ஏற்பாடுகள் குறித்தும் ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10,04)

### இந்தியத் தலையீடு...

பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல் ஆகியோரும் அனுப்பிவைத்துள்ளனர்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சீனாவிலிருந்து இரண்டு புத்திஜீவிகளும், இஸ்ரேல், நேபாளம், பங்களாதேஷிலிருந்து ஒவ்வொரு புத்திஜீவிகளும் வரவுள்ளனர். புதுடெல்கியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கையிலிருந்து இரண்டு பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஒருவராவார்.

இந்த மாநாடு நோர்வேயின் அனுசரணையின் முயற்சியில் தற்போது தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சிக்கான மாற்றுவழி குறித்தும் ஆராயப்படும். இந்த மாநாட்டில் மனித உரிமை ஆர்வலரான எஸ்.சி.சந்திரகாசன் மற்றும் ரி.சிறிதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இதில் சந்திரகாசன் சென்னையை வசிப்பிடமாகவும் சிறிதரன் அமெரிக்கா வாழ். இலங்கையராகவும் உள்ளனர்.

### வெள்ளவத்தையில்..

பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பா[illegible] மேலும் தெரியவருவதாவது -

றொக்சி காடன் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் கருணா குழுவைச் சேர்ந்த நால்வர் தங்கியிருந்தனர். இதன்போது நேற்றிரவு அங்குசென்ற இனந்தெரியாதவர்கள் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததுடன் மற்றைய இருவர் காயமடைந்தனர். மற்றைய ஒருவர் தப்பியோடிவிட்டார்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் தொடர்பான மேலதிக விபரங்கள் எதுவும் நேற்றிரவுவரை தெரியவரவில்லை. (01)

### விஞ்ஞானபீடத்தினரின்...

ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் பேராசிரியருமான கே.குணரட்ணமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், விஞ்ஞான பீடாதிபதி இ.குமாரவடிவேல் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கண்காட்சியில் மீன்பிடியியல், தாவரவியல், இரசாயனவியல், கணினி விஞ்ஞானம், பௌதீகவியல் ஆகிய துறைகளின் கண்காட்சிகள் வடிவமைக்கப்பட்டு மிகவும் பிரமாண்டமாக ஒழுங்குகளை மாணவர்கள் மேற்கொண்டுள்ளனர். இந்தக் கண்காட்சி இன்றுமுதல் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலைவரை கண்காட்சியை பார்வையிட முடியும்.

இந்தக் கண்காட்சி மூலம் மாணவர்கள் மட்டுமன்றி - மீன்பிடி, தாவரச் செய்கை, கணினித்துறை, பௌதிகவியல், விலங்கு வளர்ப்பு ஆகிய துறைகளுடன் தொடர்புடையவர்களும் பயனடைய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.